வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 17.04.2023 திங்கட்கிழமை இதழ் : 128 பக்கங்கள் : 16

# எதிர்க்கட்சிகளின் பேரணி நாளை மறுதினம் ஆரம்பம்!

## ஈஸ்டர் தாக்குதல் - இனவாத பின்னணி குறித்த தகவல்களும் வெளியிடப்படுமாம்!

கொழும்பு, ஏப். 17
அரசாங்கத்துக்கு எதிராக அனைத்து எதிர்க்கட்சிகளும் இணைந்து நடத்தும் பேரணி எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பை ஆக்கிரமிக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தப் பேரணி நாளை மறுதினம் புதன்கிழமை நாட்டின் ஐந்து இடங்களில் இருந்து ஆரம்பமாகும்.

'பாசத்துக்கான யாத்திரை' சென ஹஸே யாத்திரை) என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் பேரணி எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பை வந்தடையும்.

15


பண்ணை சுற்று வட்டத்தில்

# அம்மன் சிலையை அகற்ற அறிவித்தல் ஒட்டியது பொலிஸ்!

யாழ்ப்பாணம், ஏப். 17
யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நயினாதீவு நாகபூசணி அம்மனை பிரதிபலிக்கும் திருவுருவ சிலையை அகற்ற பொலிஸார் அப்பகுதியில் அறிவித்தல் ஒட்டியுள்ளனர்.

நீதிமன்றின் கட்டளை என யாழ்ப்

15



# சிலை விவகாரம் இன்று கூட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 17
பண்ணை சுற்றுவட்டத்தில் வைக்கப்பட்டுள்ள அம்மன் சிலை தொடர்பில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆலயத்தை பிரதி

15

# 5 அம்ச கோரிக்கையை முன்வைத்து நேற்று நல்லூரில் உண்ணாவிரதம்!

## சமய, அரசியல் தலைவர்கள் பங்கேற்பு





யாழ்ப்பாணம், ஏப்ரல் 17
தமிழரின் மரபுரிமைகளை பாதுகாப்போம் என்ற தொனிப் பொருளில் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நல்லூரில் நேற்று அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. அத்துடன், கையெழுத்துப் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

15

# சந்நிதி முருகன் ஆலயம் அருகே வேறு மதப் பிரிவின் கட்டடம்!

## தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

வடமராட்சி, ஏப். 17
வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு அண்மையாக - அக்கரை பகுதியில் தனிநபர் ஒருவர் அமைக்கும் வேறொரு மதப் பிரிவின் சபை கட்டடத்தை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஆலய நிர்வாகம் கடந்த வருடம் மார்ச் மாதமே எழுத்து மூலம் கோப்பாய் பிரதேச செயலரை கோரியதாகவும் தற்போது அந்தக் கட்டடம் அமைக்கப்படும் பணி நிறைவுற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன், இந்த விடயம் குறித்து அப்போது வலி. வடக்கு பிரதேச சபையின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

எனினும், எந்தத் தரப்பினரும்

15

# மத ரீதியாக தமிழ் மக்களை பிளவுபடுத்த சதி முயற்சி!

## கஜேந்திரன் எம். பி. சாடல்

யாழ்ப்பாணம், ஏப். 17
1948ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்கள் வேறுபாடுகளை களைந்து ஓர் இனமாக தமது விடுதலை பயணத்தை மேற்கொண்டிருந்தனர். ஆனால், தற்போது தமிழர்களை மத ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பிளவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பாராளுமன்ற

15

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்:

# வழக்கை தாமதிக்க லஞ்சம் விசாரணை செய்ய பணிப்பு

கொழும்பு, ஏப். 17
எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றி எரிந்ததால் இலங்கை கடல்பரப்புக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்திடமிருந்து நட்டஈடு பெறுவதற்கான வழக்கை தாமதப்படுத்த 25 கோடி டொலர் இலஞ்சம் வழங்கப்பட்டது தொடர்பில் விசாரணை செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்திருக்கிறேன் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்

15

# நாம் அரசுடன் இணைவது முற்றிலும் பொய்யானது!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஏப். 17
ஐக்கிய மக்கள் சக்தியும் மற்றும் தாங்களும் அமைச்சர் பதவிகளைப் பகிர்வது போன்ற வரப்பிரசாதம் மற்றும் சலுகைகளின் அடிப்படையில் அரசாங்கத்துடன் ஒன்றிணைவதற்கு தயாராகி வருகிறோம் என்ற செய்தியை அரசாங்க சார்பு குழுக்கள் உருவாக்கி விளம்பரப்படுத்தியுள்ளன. இந்தப் போலிச் செய்தியை நாங்கள்



15



# யாழிலிருந்து மட்டக்களப்புக்கு அன்னைபூபதி ஊர்தி பேரணி!

யாழ்ப்பாணம், ஏப். 17
அன்னை பூபதியின் 35ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி ஊர்திப்பவனி ஆரம்ப

15

# எக்னலியகொட காணாமல் ஆக்கப்பட்டதில் மகிந்த, பிள்ளையான், கருணாவுக்கு தொடர்பு!

## சந்தியா எக்னெலியகொட சாடல்

மட்டக்களப்பு, ஏப். 17
தனது கணவர் பிரகீத் எக்னலியகொட காணாமல் ஆக்கப்பட்டத்தில் மகிந்த, கருணா, பிள்ளையான் ஆகிய மூவருக்கும் தொடர்பு உள்ளது என்று சந்தியா எக்னலியகொட சாடியுள்ளார். அத்துடன், மட்டக்களப்பில் இடம்பெற்ற அனைத்து விதமான கொலை, கொள்ளை கடத்தல்களுக்கு கருணா, பிள்ளையானே மூல காரணமாக இருந்தனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் மட்டக்களப்பில் நியாய பயணம் என்னும் தொனிப் பொருளிலான நடைபயணம் நேற்று 340 ஆவது நாளாகவும் நடந்தது. இதில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே சந்தியா மேற்கண்டவாறு கூறினார்.

கருணா, பிள்ளையான், மகிந்த ராஜபக்ஷ இவர்கள் தனித்தனியான

15

# டெங்கு நோயால் பெண் சிப்பாய் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 17
குருநகர் இராணுவ முகாமில் பணியாற்றும் 23 வயது பெண் சிப்பாய் டெங்கு நோய் தாக்கத்தால் உயிரிழந்தார்.

கடந்த 5ஆம் திகதி அவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. மறுநாள் பலாலி இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு

15

## இப்படியும் நடக்கிறது...!

பௌத்தர்களும் இந்துக்களும் இணைந்து தேசிய இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்று குறித்து கடந்த வெள்ளியன்று இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்தக் கலந்துரையாடல் குறித்து இன்னும் விளக்கமாக எழுதியிருக்கலாமே என்று பலரும் அங்கலாய்த்ததைக் கவனிக்க முடிந்தது.

தாம் ஆரம்பிக்கவிருக்கும் அந்தத் தேசிய இயக்கத்தில் வடக்கிலிருந்து யாரை உள்வாங்கலாம் என்பதற்காக நண்பரிடம் கருத்துக் கேட்டது பற்றியும் வடக்கில் அண்மைக்காலமாக அவ்வப்போது சில ஆர்ப்பாட்டங்களையும் சில கோமாளித்தனங்களையும் செய்துகொண்டிருக்கும் ஒருவரைப் பற்றி அந்த நண்பரிடம் ஆலோசனை கேட்டது பற்றியும் எழுதியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு, யார் அந்த நபர் என்பதை அறிய ஏராளமான நண்பர்கள், வாசகர்கள் ஊர்க்குருவியை அணுகியபோதுதான் எவ்வளவு தூரம் அந்தச் செய்தியில் கவனம் செலுத்தி இருக்கின்றார்கள் என்பதை அறிய முடிந்தது.

இப்போது அவர் யார் என்பதல்ல இந்த ஊர்க்குருவிக்கு முக்கியமானது.

ஆனால், இவ்வாறு அறிந்தகொள்ள விரும்பிய பலரும் இவராக இருக்குமா? அவராக இருக்குமா? என்று தத்தமக்கு புரிந்தவாறு கேட்டிருந்தனர்.

அப்போதுதான், நமது தலைவர்கள் பலரின் மீதான நம்மவர்களின் கருத்தை- அல்லது கணிப்பை அறிய முடிந்தது.

அவ்வப்போது சில ஆர்ப்பாட்டங்களையும் சில கோமாளித்தனங்களையும் செய்துகொண்டிருக்கும் ஒருவரைப் பற்றி நண்பரிடம் ஆலோசனை கேட்டிருக்கின்றார்கள் என்றல்லவா எழுதியிருந்தேன்.

அப்படியெனில், இந்த ஊர்க்குருவியுடன் தொடர்பு கொண்டு கேட்டவர்கள் தெரிவித்த பலரும் அப்படி கோமாளித்தனங்களைச் செய்து கொண்டிருப்பதாகத்தான் நம்மவர்கள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிந்தபோது அந்தத் தலைவர்களுக்காக அனுதாபப்படத்தான் முடிந்தது.

அவர்கள் கேட்ட அந்த நபரைப் பற்றி - அவர் விபரத்தை எழுதி அவரை அந்தளவுக்கு உயர்த்திப் பார்க்க இந்த ஊர்க்குருவிக்கு மனம் இடம்தரவில்லை.

இனி இந்தப் பத்தியில் எழுத வந்ததைப் பார்ப்போம்.

நேற்று முன்தினம் 'ஈழநாடு'வில் ''எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவையும் இணைத்துக்கொண்டு எனது வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு தாருங்கள். எதிர்காலத்தில் சஜித்துக்கு பிரதமர் பதவியைக்கூட வழங்க நான் தயார்.' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னைச் சந்தித்த மனோ கணேசன், ஹக்கீம் ஆகியோரிடம் தெரிவித்திருந்தார் என்று ஒரு செய்தி வெளியாகியிருந்தது. ஆனால் அது வெளிவந்த பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியையும் ஐ. தே. கவையும் இணைக்கும் முயற்சி நடந்தது உண்மைதான் ஆனால், அந்த முயற்சியை சஜித் நிராகரித்து விட்டார் என்று மனோ கணேசன் அறிவித்திருந்தார். அது தொடர்பாக வெளிவந்த செய்தியையும் மனோ கணேசன் மறுத்திருக்கிறார்.

இது குறித்து ரணில் தரப்பில் விசாரித்தபோது, அதாவது பிரதமர் பதவியை வழங்குவதற்கு ரணில் தயார் என்று தெரிவித்திருந்ததும் உண்மைதான். ஆனால், உடனடியாக வழங்கமுடியாது.ஏனெனில், தற்போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருக்கும் பொதுஜன பெரமுன அதற்கு உடன்படாது என்பதாலேயே அவர் அவ்வாறு கூறியிருந்தார் என்று ரணிலுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆக, உடனடியாக பிரதமராக நியமித்திருந்தால் சஜித் அதற்கு உடன்பட்டிருப்பாரோ என்னவோ?

அவரின் அணியிலிருந்து சிறுபான்மைக் கட்சிகள் ரணிலுடன் இணைவது என்பது ஏற்கனவே உறுதி செய்யப் பட்டுவிட்டதாகவே தெரிகின்றது. அதனால்தான் அவர்களைத் தனித்தனியே சந்தித்து சஜித் கடைசிக் கட்டப் பேச்சுக்களில் ஈடுபட்டிருகின்றார். அவரின் அந்த சந்திப்புக்கு பின்னர் நிலைமை மாறுமா என்பது தெரியவில்லை.

சிறுபான்மைக் கட்சிகளை விட, தன்னிடமுள்ள முப்பத்தியேழு பேரில் பெரும்பாலானவர்கள் ரணிலுடன் சங்கமமாவதும் சஜித்தை மேலும் பலவீனமடையவே செய்யும். இந்நிலையில், அவர் உடனடியாக மறுத்தாலும் விரைவில் அவரின் முடிவில் மாற்றம் வரலாம் என்கின்றனர் சிலர். இன்னும் சில நாட்களில் எல்லாம் தெரியவரலாம்.!

**- ஊர்க்குருவி**

## மக்களை ஒடுக்குவதை பற்றி சிந்தித்தே பயங்கரவாத சட்டம் உருவாக்கப்பட்டது!

### சந்திரகுமார் சாடல்

கிளிநொச்சி, ஏப். 17

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மக்களை ஒடுக்குவது பற்றி சிந்தித்தே தயாரிக்கப்பட்டுள்ளது எதிர்காலத்தில் இது கொண்டுவந்தோரையும் ஆதரித்தோரையும் திருப்பித் தாக்கும் என்று சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு சந்திரகுமார் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

இந்த ஆட்சி மாறிப் புதிய ஆட்சி ஒன்று அமையுமிடத்து, இந்தச் சட்டத்தின் பாரதூரத்தன்மையை இதைக் கொண்டு வந்தோரும் முன்மொழிந்தோரும் கூட அனுபவிக்க நேரலாம். ஆகவே, நாட்டின் மேம்பாட்டுக்குரிய வழிவகைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமே தவிர, எந்த நிலையிலும் அதற்கு எதிராக மக்களைக் கட்டுப்படுத்தி - ஒடுக்குவதைப் பற்றிச் சிந்திக்கவேகூடாது. அரசாங்கத்தால் கொண்டு வரப்படவுள்ள புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் நாட்டை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் அபாயகரமான சட்டமாகவே உள்ளது. இது நடைமுறைப் படுத்தப்பட்டால் நாட்டுக்கும் மக்களுக்கும் பெரும் பாதிப்பை நிச்சயமாக உண்டாக்கும்.

மேலும், மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதுடன், நீதித்துறையையும் பலவீனப்படுத்தும். அரசியல் நெருக்கடி, பொருளாதார நெருக்கடி போன்றவற்றிலிருந்து மீள வேண்டிய நிலையில் உள்ள நாட்டை எதிர் நிலைக்கு உள்ளாக்கி ஜனநாயக நெருக்கடிக்குள்ளும் தள்ளிவிடும். இந்தத் தவறை அரசாங்கம் செய்யக்கூடாது.

நாட்டிலே தீர்வின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்ற இனப்பகை, அதன் விளைவான அரசியல் நெருக்கடி. நாட்டை ஸ்தம்பித நிலைக்குள்ளாக்கியிருக்கும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றுக்கு தீர்வைக் கண்டு நாட்டை மீட்டெடுக்க வேண்டியுள்ளது. இதற்கான வழிவகைகளை மிக விரைவில் காண வேண்டும். இதில் அனைத்துத் தரப்பினருடைய பங்கேற்பும் அவசியமாகும்.

அதற்கான ஏது நிலைகளையும் சூழலையும் அரசாங்கம் உருவாக்கி இந்தப் பங்களிப்பை பெற வேண்டும். இதைச் செய்வதற்குப் பதிலாக, புதிய புதிய சட்டங்களால் மக்களையும் மக்களுக்கான செயல்பாட்டு இயக்கங்களையும் கட்டுப்படுத்தி அரசாங்கத்திலிருந்து தூர விலக்க முற்படுவது அபாயகரமானது. அது மட்டுமல்ல, அது மக்களுடைய உரிமைகளை இல்லாதொழிப்பதுமாகும். இது நெருக்கடிகளை மேலும் அதிகரிக்கவே செய்யும். 1979 இல் தற்காலிகமாகக் கொண்டு வரப்பட்டு இன்னும் நிலுவையிலிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் நாடு சந்தித்த பேரிழப்புகளும் பின்னடைவுகளும் கொஞ்சமல்ல. அப்படியிருக்கும் போது அதையும் விட மிக மோசமான புதிய தடைச் சட்டத்தை கொண்டு வந்தால் இரட்டிப்புப் பாதிப்பும் பின்னடைவுமே நிகழும். உலகிலுள்ள சில நாடுகளில் ஜனநாயகச் செழிப்பைப் புறக் கணித்து அரைச் சர்வாதிகார ஆட்சிமுறை முன்னெடுக்கப்படுகிறது என்பதற்காக அதைப் போல இலங்கையும் தன்னை உருவகிக்க முற்படுகிறது. இது தவறானதாகும். இந்தப் புதிய பயங்கரவாதச் சட்டத்தை நாடின் மேம்பாட்டிலும் பாதுகாப்பிலும் கரிசனை கொண்ட அனைவரும் மறுதலித்து - எதிர்க்க வேண்டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அரசாங்கம் மீளப்பெற வேண்டும்!

### லக்ஷ்மன் கிரியெல்ல



கொழும்பு, ஏப். 17

அரசாங்கம் வெளியிட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அரச பயங்கரவாத சட்டமூலமாகும். தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் எச்சரிக்கை விடுக்கப்பட்டு வரும் இந்த சட்டமூலத்தை அரசாங்கம் மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின்போது பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக நீதி அமைச்சர் தெரிவித்திருக்கின்ற நிலையில், இது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சி எவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்ளப்போகிறது என்பது தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், அரசாங்கம் வர்த்தமானியில் வெளியிட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அரச பயங்கரவாத சட்டமூலமாகும். இந்த சட்டமூலத்துக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர். அதேபோன்று இந்த சட்டமூலத்துக்கு சர்வதேச ரீதியிலும் பாரிய எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதனால் அரசாங்கம் இந்த சட்டமூலத்தை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அத்துடன், அரசாங்கத்தின் இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு சர்வதேச ரீதியில் மாத்திரமல்லாது, தேசிய மட்டத்திலும் பெரும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கம் தற்போது வர்த்தமானியில் வெளியிட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டது அல்ல. சட்டமா அதிபர் திணைக்களம் தயாரித்திருந்தால், முழுமையாக நிராகரிக்கப்படும் சட்டமூலத்தை தயாரிப்பதில்லை.

அதனால், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கத்துக்கு மிகவும் நெருக்கமான சட்டத்தரணிகள் சிலரே தயாரித்து, தற்போது பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அரசமைப்பின் 20ஆம் திருத்த தயாரிப்பிலும் இவர்கள் இதைத்தான் செய்தார்கள். அதனால்தான் 20ஆம் திருத்தம் அனுமதிக்கப்பட்டு 2 வருடங்களுக்கு முன்னரே நிராகரிக்கப்பட்டு, மீண்டும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதனால் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின்போது சமர்ப்பிப்பதாக அறியக்கிடைக்கிறது. பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்த பின்னர் அதற்கு எதிராக நாங்கள் நீதிமன்றம் செல்வோம். குறித்த சட்டமூலத்தில் இருக்கும் அதிகமான உறுப்புரைகள் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்படும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது - என்றார். (ஐ)

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 17

அனைத்து அரசாங்கப் பாடசாலைகளும் தவணை அட்டவணையின்படி இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் தேசிய பாடசாலைகளில் இடைநிலை வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான புதிய சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது. அத்துடன், கல்வி அமைச்சு இடைநிலை வகுப்புகளுக்கான அனுமதி கடிதங்களை வழங்காது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
17.04.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# உள்ளக பொறிமுறைக்கு முதலில்?

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான சட்ட வரைவுக்கு அமைச்சரவை ஆதரவளித்திருக்கின்றது. இந்த நிலையில், உள்ளக பொறிமுறைக்கு பாதிக்கப்பட்ட மக்கள் ஆதரவளித்தேயாக வேண்டும் - அதற்கு மாறாக சர்வதேசத்திற்காக காத்திருப்பவர்கள் தொடர்பிலோ - அல்லது ஆணைக்குழுவை எதிர்ப்பவர்கள் தொடர்பிலோ தான் அலட்டிக் கொள்ளப் போவதில்லையென்று ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார். 2015இல் உள்ளக பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிக்கு ரணில் ஆதரவளித்திருந்தார். அந்த அடிப்படையில் சில முன்னெடுப்புகளும் இடம்பெற்றிருந்தன. எனினும், ரணில் - மைத்திரி மோதலைத் தொடர்ந்து நல்லாட்சி அரசாங்கம் உள்ளுக்குள் சீர்குலைந்தது.

ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் இவ்வாறானதோர் அணுகுமுறையில்தான் விடயங்களை அணுக முற்படுவார் என்பதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. இலங்கைமீதான சர்வதேச அழுத்தங்களின் எல்லையை விளங்கிக் கொண்டவர்கள் அனைவருமே சர்வதேச அழுத்தத்தை கண்டு அஞ்சப் போவதில்லை. ஏனெனில், குறித்த அழுத்தங்களால் நாட்டைக் கட்டுப்படுத்த முடியாது.

இலங்கை விடயத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைசார்ந்த அழுத்தங்களின் இலக்கு இலங்கையை தனிமைப்படுத்துவதல்ல - மாறாக, இலங்கையுடன் நெருக்கமாக செயல்படுவதாகும். அதேவேளை இலங்கைமீதான மனித உரிமை சார்ந்த அழுத்தங்களுக்கு பிறிதொரு பரிணாமமும் உண்டு. இந்த நெருக்கத்தை ஏற்படுத்துவதற்கு இலகுவான ஆட்சியாளர்களே தற்போதைய தேவையாகும். 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அனைவரின் கவனமும் உள்ளக பொறிமுறையின் மீதே திரும்பியது. மேற்குலகமும் ரணில் - மைத்திரி ஆட்சியுடன்தான் இருந்தது.

அதாவது, இலங்கைமீதான அழுத்தங்களை ஒரு நெகிழ்வான நிலையிலேயே பேணிக்கொள்ள வேண்டும் - இல்லாவிட்டால், தங்களின் அழுத்தங்கள் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்திவிடலாமென்னும் பார்வையும் மேற்குலகிடம் உண்டு. அழுத்தங்களை கடுமையாக்கினால் கொழும்பு சீனாவை நோக்கிச் செல்வதை ஒரு தெரிவாக்கி விடலாமென்னும் அச்சம் உண்டு. இந்த விடயத்தில் இந்தியா கூடுதல் கரிசைனயை காண்பிக்க வாய்ப்பு உண்டு. மேற்குலகின் அழுத்தங்கள் ஓர் எல்லைக்கு மேல் சென்றுவிடக் கூடாதென்னும் இராஜதந்திர அழுத்தங்களை இந்தியாவும் பிரயோகிக்க வாய்ப்பு உண்டு.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் ரணில் விக்கிரமசிங்க உள்ளக பொறிமுறையை முன்னிலைப்படுத்தினால் அதனை மேற்குலகம் எதிர்க்கப் போவதில்லை. வெளிப்படைத் தன்மையுடன்கூடிய பொறிமுறையாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே அவர்களின் கோரிக்கையாக இருக்கும்.

அரசாங்கம் உள்ளக பொறிமுறை தொடர்பில் விடயங்களை முன்னெடுத்தால் அதனை தமிழர் தரப்பு எவ்வாறு கையாள்வது? எங்களுக்கு சர்வதேச விசாரணைதான் வேண்டுமென்று கூறிவிட்டு வழமைபோல் அறிக்கைகளை வெளியிட்டுவிட்டு அமைதியடைவதா அல்லது இதனை தந்திரோபாய ரீதியாக கையாள்வதா?

உள்ளக பொறிமுறையை தமிழ் மக்கள் சாதகமாகப் பார்க்க வேண்டுமாயின் முதலில் ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி - மாகாண சபை முறைமையை வினைத்திறன் மிக்கதாக மாற்ற வேண்டும். இந்த விடயம்தான் உள்ளக பொறிமுறையின் ஆரம்பமாக இருக்க வேண்டும். ஒரு பொறிமுறை வெற்றியளிக்க வேண்டுமாயின், முதலில் அரசாங்கத்தை பாதிக்கப்பட்ட மக்கள் நம்ப வேண்டும். இன்று வரையில் பாதிக்கப்பட்ட மக்கள் நம்புமளவுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை. இந்த விடயத்தைத்தான் தமிழ்த் தேசியக் கட்சிகள் கையிலெடுக்க வேண்டும். இது தொடர்பில் ஒரு கூட்டுத் தீர்மானத்துக்கு கட்சிகள் வரவேண்டும்.

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் ஊடகத்துக்கு பொருந்ததாத கூறுகள்!

## இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்

கொழும்பு, ஏப். 17

முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் ஊடக சமூகதுக்குப் பொருந்தாத பல சர்ச்சைக்குரிய கூறுகள் உள்ளன என்று இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் கருதுவதுடன் முன்மொழியப்பட்ட சட்ட மூலம், ‘பயங்கரவாத செயல்கள்’ என்பதன் பரந்த மற்றும் தெளிவற்ற வரையறையைக் கொண்டுள்ளது எனவும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் அதன் அங்கத்துவ அமைப்புகளும் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புகளும் 22 மார்ச் 2023 அன்று வெளியிடப்பட்ட உத்தேச ‘பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்’ (17 மார்ச் 2023 திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு) தொடர்பாக ஆழந்த கரிசனை கொண்டுள்ளனர். 1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க சட்டமாகிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு (தற்காலிக விதிகள்) பதிலாக வரையப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட சட்ட மூலத்தில் ஊடக சமூகத்திற்குப் பொருந்தாத பல சர்ச்சைக்குரிய கூறுகள் உள்ளன என்று இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் கருதுகின்றது. முன்மொழியப்பட்ட சட்ட மூலம், ‘பயங்கரவாதச் செயல்கள்’ என்பதன் பரந்த மற்றும் தெளிவற்ற வரையறையைக் கொண்டுள்ளது.

இது கருத்துச் சுதந்திரத்தைக் குறைக்கும் விதத்தில் விளக்கம் அளிக்கப்படலாம். முன்மொழியப்பட்ட சட்ட மூலத்திலுள்ள பரந்துபட்ட அதிகாரங்களால் பேச்சு குற்றப்படுத்தலானது, பயங்கரவாத செயல்பாடுகளில் ஈடுபட அல்லது ஊக்குவிக்க அல்லது தயார்ப்படுத்துவதற்கான தூண்டுதலாக புரிந்து கொள்ளப்படலாம்.

அத்துடன், அது அவர்களின் நோக்கம் அல்ல என்பதை நிரூபிக்க பிரதிவாதி மீது ஆதாரத்தின் சுமை ஏற்படுத்தப்படுகின்றது. பிரசுரங்களை வெளியிடுபவர்கள், விநியோகிப்பவர்கள், விற்பனை செய்பவர்கள் அல்லது அனுப்புபவர்களுக்கும் இந்தக் குற்றங்கள் பொருந்துவதுடன் பயங்கரவாதச் செயல்களை ஊக்குவிக்கும் பொருட்களாகவும் மொழிபெயர்ப்பு செய்யப்படலாம்.

சட்டமூலத்தின்படி, இரகசியத் தகவல் என்பது ‘தேசிய பாதுகாப்பு ஃ பாதுகாப்பு’ மீது ‘பாதகமான தாக்கத்தை’ ஏற்படுத்தும் எந்தத் தகவலாகவும் இருக்கலாம், அதில் ‘பொதுத் தளத்தில் இல்லாத எந்தத் தகவலும்’ அடங்கும். எனவே, ‘இரகசியத் தகவல்’ என்ற பரந்த மற்றும் தெளிவற்ற வகைப்படுத்தலானது, குற்றவியல் சட்டத்தின் கீழ் வரும் பல குற்றங்கள் தற்போது ‘பயங்கரவாத குற்றங்கள்’ என மறுவடிவமைக்கப்படுவதால், ஊடகத்தில் பணிபுரிபவர்கள் அவர்களின் கடமைகளை நிறைவேற்றும் போது அவர்களை ஓர் ஆபத்தான நிலைக்கு உட்படுத்தலாம்.

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான மற்றும் ஒன்றிணைவதற்கான சுதந்திரம் மற்றும் கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்தும் சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரஜைகளின் அரசமைப்பு ரீதியாக உத்தரவாதம் அளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளானவை முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மூலம் அச்சுறுத்தப்படுகின்றன என்பது தெளிவாகின்றது - என்றுள்ளது. (ஐ)

# மின்சார ரயில் பாதை அமைப்பதற்கு திட்டம்!

## பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 17

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றலா பயணிகளை ஈர்ப்பதற்காகவும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்குடனும் நானுஓயா முதல் நுவரெலியா ஊடாக உடபுஸல்லாவை வரை மின்சார ரயில் பாதை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நுவரெலியா உள்ளிட்ட மத்திய சுற்றுலா பிரதேசத்திலுள்ள இடங்களுக்கு அதிகளவான சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் மின்சார ரயில் பாதை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது




என்று அமைச்சர் இங்கு குறிப்பிட்டார்.

அண்மையில், நுவரெலியா பிரதேசத்தில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்ட அமைச்சர் தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இத்திட்டமானது இயக்க மற்றும் பரிமாற்றம் முறையின் கீழ் நிர்மாணிக்கப்படும் எனறும், அதற்கு பொருத்தமான முதலீட்டாளர் இணைத்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரிவித்தார்.

உலகின் ஆறாவது உயரமான புகையிரத நிலையமான கந்தபொலை புகையிரத நிலையம் உட்பட பல புகையிரத நிலையங்களை உள்ளடக்கியதாக இந்தப் புகையிரத பாதை அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இதனூடாக சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு பெரும் வசதிகள் உள்ளன என்றும் சுட்டிக் காட்டினார்.

இதற்கமைய, பல புதிய ரயில் நிலையங்களை உள்ளடக்கி சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன - என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



தமிழ்நாடு

ஏப்ரல் - 17 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 04
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : திதித்துவயம்




**மேடம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். புதுத்தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உங்கள் கை ஓங்கும். திட்டம் நிறைவேறும்.

**இடபம்**
மற்றவர்களால் செய்ய முடியாத செயற்கரிய காரியங்களையெல்லாம் முடித்துக் காட்டுவீர்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**மிதுனம்**
உற்சாகமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். வாகனத்தை சரி செய்வீர்கள். பாராட்டப்படுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் பதற்றம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் உங்கள் பெயர்கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம். முன் கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**சிம்மம்**
தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். அமைதி நிலவும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**கன்னி**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நல்ல செய்தி வரும். வழக்கு விஷயங்கள் சாதகமாகும். புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். மனதில் நிறைவு பெறும் நாள்.

**விருட்சிகம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. பணப்பற்றாக்குறையை சமாளிப்பீர்கள். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் புது அனுபவம் உண்டாகும்.

**தனுசு**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். சாலைகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**மீனம்**
எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

# காங்கிரஸ் கட்சியினர் நேற்று ரயில் மறியல் போராட்டம்!

## 76 இடங்களில் நடைபெற்றது
## 180 போராட்டக்காரர்கள் கைது

சென்னை, ஏப். 17

இந்திய பிரதமர் மோடியை அவதூறாகப் பேசிய வழக்கில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து, அவரது எம்.பி.பதவி தகுதி இழப்பு செய்யப்பட்டது. இதைக் கண்டித்து நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சியினர் போராடி வருகின்றனர். இந்நிலையில் தமிழகம் முழுவதும் நேற்று ரயில் மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. கட்சி ரீதியிலான 76 மாவட்டங்களில் இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன.




சென்னை மாவட்டத்தில் 7 மாவட்டத் தலைவர்கள் சார்பில் எழும்பூர் ரயில் நிலையத்தில் போராட்டம் நடைபெற்றது. இதேபோல, அந்தந்த மாவட்டங்களில் கட்சியின் மாவட்டத் தலைவர்கள் தலைமையிலும் நேற்று ரயில் மறியல்போராட்டங்கள் நடைபெற்றன.

ரயில் மறியலில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர். நேற்று மதியம் வரை 180 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சிந்துவெளி பண்பாடு தமிழுக்கே சொந்தம்!

## முதலமைச்சர் ஸ்டாலின்



சென்னை, ஏப். 17

சிந்து சமவெளி பண்பாட்டுக்கு சொந்தம் கொண்டாடும் உரிமை தமிழுக்கே உள்ளது என்பதை ஆய்வுகள் கூறுகின்றன என்று சென்னையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் முதல்வர் மு. க. ஸ்டாலின் பெருமிதத்துடன் கூறினார்.

'ஒரு பண்பாட்டின் பயணம்: சிந்து முதல் வைகை வரை' என்ற நூல் வெளியீட்டு விழா சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய முதல்வர்,

சங்க இலக்கியங்களை திராவிட இயக்க மேடைகளில் முழங்கியபோது, இதெல்லாம் இலக்கியம் தானே, வரலாறு இல்லையே என்று பலரும் நிராகரித்தார்கள். அந்த சொல்லியல் அனைத்துக்கும் இப் போது தொல்லியல் ஆதாரம் கிடைத்திருக்கிறது. அதைத்தான் பாலகிருஷ்ணன் அளப்பரிய பணியாக செய்து முடித்திருக்கிறார்.

சிந்து சமவெளி பண்பாடு என்பது 5 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. அப்போது வாழ்ந்த மக்கள் யார், அவர்கள் பேசிய மொழி எது என்பன போன்ற கேள்விகளுக்கான விடையை இந்த நூலில் காணலாம்.

சிந்து பண்பாடு பரவியிருக்கும் குஜராத், மகா ராஷ்டிரா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈரான் போன்ற இடங்களுக்குப் போய் ஆய்வு செய்து, அங்கு தமிழ் பெயர்கள் இருப்பதை பதிவிட்டுள்ளார். சிந்து சமவெளி பயன்பாட்டுக்கு சொந்தம் கொண்டாடும் உரிமை தமிழுக்கே உள்ளது என் பதை இந்த ஆய்வுகள் கூறுகின்றன - என்றார்.

(ஐ)

# அண்ணாலைக்கு பணம் வழங்குவது யார் என்று விசாரிக்கப்பட வேண்டும்?

## காங்கிரஸ் கட்சி வலியுறுத்து



சென்னை, ஏப். 17

பா. ஜ. க. அண்ணாமலைக்கு யார் பணம் கொடுக்கிறார்கள் என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி வலியுறுத்தியுள்ளார்.

பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, தி. மு. க. தலைவர் ஸ்டாலின், அவரின் குடும்பத்தினர், தி. மு. க. எம். பிக்கள், அமைச்சர்கள் உள்ளிட்டோரின் சொத்து பட்டியலை அண்மையில் வெளியிட்டார்.

தொடர்ந்து அவர் பயன்படுத்தி வரும் கைக்கடிகாரம், தனக்கு வந்து சேர்ந்த விவரம், தனது வீட்டு வாடகை உள்ளிட்ட செலவுகளை தனது நண்பர்கள் ஏற்பதாகவும் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி நேற்று தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது:

எனது 50 ஆண்டுகால பொது வாழ்க்கையில் 2 முறை சட்டப்பேரவை உறுப்பினராகவும், ஒரு முறை மக்களவை உறுப்பினராகவும் இருந்து தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருக்கிறேன். நான், சென்னை நந்தனத்தில் உள்ள தமிழ்நாடு அரசு அடுக்கு மாடி குடியிருப்பில் மாதம் ரூ.16 ஆயிரம் வாடகைக்கு குடியிருக்கிறேன். ஒரு வருடமாக வாடகை கட்டவில்லை என்று அறிவிப்பு பெறுகிற நிலையில் இருக்கிறேன்.

நான்கு ஆடுகளை மட்டுமே வைத்திருந்ததாக கூறிய பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, மாதம் ஒன்றுக்கு மூன்றே முக்கால் இலட்சம் ரூபாய் வீட்டு வாடகை எப்படி கொடுக்க முடிகிறது? 3 இலட்ச ரூபாய் கைக் கடிகாரம் எப்படி அணிய முடிகிறது? இதற்கு யார் பணம் கொடுக்கிறார்கள்? இதுகுறித்து உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

(ஐ)

# யாழ்ப்பாணத்தின் தீவுக் கூட்டங்களை மாவட்ட அதிகார சபையே நிர்வகிக்கும்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

**யாழ்ப்பாணம், ஏப். 17**
**யாழ்ப்பாணத்தில் பல தீவுக் கூட்டங்கள் இருப்பினும் அவை வழமைபோன்று மாவட்ட அதிகார சபைக்கு உட்பட்டே நிர்வகிக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**



இதேவேளை, இலங்கையில் காணப்படும் நூற்றுக்கணக்கான தீவுகளுக்காக அமைச்சரவைப் பத்திரம் கொண்டுவரப்பட்டது. இந்த அபிவிருத்தி சபை மூலம் அபிவிருத்தி முதலீடுகளை மட்டுமே மேற்காள்ள முடியும். எனவே, அந்தந்தப் பகுதிக்குரிய மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தே எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படும்.

இதுவரை இவை நடைமுறைப்படுத் தப்படவில்லை. இனி வருங்காலங்களில் நடைமுறைப்படுத் தப்பட்டாலும் எவ்வித பிரச்னைகளும் இல்லை.

யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்ட நயினாதீவு நாகபூசணி அம்மனின் சிலையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன்தினம் பார்வைிட்டார் இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது இரணைமடு மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் சீன நாட்டவருக்கு காணி வழங்கப்படவுள்ளதாக என்று கூறப்படும் கருத்துகள் தொடர்பில் அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர்,

இந்தக் கருத்துக்களை தெரிவிக்கும் அரசியல்வாதிகள் பினாமி அரசியலை நடத்துபவர்களாகவும் சூனிய அரசியலை நடாத்துபவர்களாகவும் பிரச்னைகளைத் தீராப் பிரச்னைகளாக வைத்திருக்க விரும்பும் அரசியல்வாதிகளின் உளறல் மட்டுமே.

இவ்விடயம் தொடர்பில் எவ்வித உண்மைத் தன்மைகளும் இல்லை. இவர்கள் மக்களை குழப்பி குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பவர்களாகக் காணப்படுவதையே வரலாறும் காட்டி நிற்கின்றது - என்றும் சொன்னார். (ஐ)



# உயிருக்கு போராடும் யானையை திரும்பி பாராத வனஜீவராசி பிரிவு

முல்லைத்தீவு, ஏப். 17

உயிருக்கு போராடும் யானையை காப்பாற்ற வனஜீவராசிகள் திணைக்களம் முன்வராத நிலையில் அதனை காப்பாற்ற இராணுவம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அறிய வருகின்றது.

முல்லைத்தீவு -மணவாளன் பட்டமுறிப்பு - கோணக்குளம் பகுதியில் கடந்த சில வாரங்களாக அந்த யானை அப்பகுதிகளில் நடமாடி வந்தது. அதன் கால்களில் காயங்கள் காணப்பட்டன என்றும் மக்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியின் குளக்கரை பகுதியில் காயமடைந்த யானை கிடந்த நிலையில் அது குறித்து வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு பல தடவைகள் அறிவித்தும் அவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தரவில்லை.

இந்த நிலையில் அந்த யானையை மீட்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அண்மையில் அதே பகுதிக்கு அருகாமையில் உள்ள மேளிவனம் பகுதியில் காயங்களுடன் உலவிய யானை ஒன்று உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரூ. 2 கோடி பெறுமதியான கஞ்சாவுடன் நெடுந்தீவு கடற்பரப்பில் மூவர் கைது!

கொழும்பு, ஏப். 17

நெடுந்தீவு கடற்பரப்பில், நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் மூவரை தாம் கைது செய்தனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் கடற்கரையோரங்களில் ஆள்கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் கண்காணிப்பு நிலையங்கள் மூலம் கடற்படையினர் தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைவாகவே நேற்று முன்தினம் இரவு குறித்த பகுதியில் விசேட சோதனை நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டிருந்தனர். இதன்போது சந்தேகத்துக்கு இடமாக பயணித்த இந்திய படகை கடற்படையினர் சோதனையிட்டனர்.

அங்கு, இரு உரப் பைகளில் பொதியிடப்பட்டிருந்த 62 கிலோகிராம் 400 கிராம் கேரள கஞ்சாவை கடற்படையினர் கைப்பற்றினர். இவ்வாறு கைப்பற்றபட்ட கஞ்சாவானாது 23 பைக்கெற்றுகளில்



பொதியிடப்பட்டிருந்தன. இதன்போது சந்தேக நபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியானது என்று தெரிவித்துள்ள கடற்படையினர், பிடிபட்ட படகு, சான்றுபொருளான கஞ்சா மற்றும் சந்தேகநபர்களை பொலிஸாரிடம் பாரப்படுத்தியள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-கே)

# கர்ப்பவதி பெண்ணை வெட்டிவிட்டு நகைகள், பணம் என்பன கொள்ளை!

வவுனியா, ஏப். 17

வீதியில் சென்ற கர்ப்பவதி பெண்ணையும் அவரின் தாயாரையும் வாளால் வெட்டிவிட்டு ஆறரைப் பவுண் நகைகள், ஒன்றரை இலட்சம் ரூபாய் பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

வவுனியா - பம்பைமடு பகுதியில் இந்தச் சம்பவம் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்றதாக நேற்று முன்தினம் வவுனியா பூவரசன்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

தாயும் மகளும் மோட்டார் சைக்களில் வவுனியா நகரிலிருந்து பூவரசன்குளத்துக்க சென்று கொண்டிருந்தனர். இரவு 8.30 மணியளவில் வவுனியா பல்கலைக்கழகம் - பம்பைமடு இராணுவ முகாமுக்கு இடைப்பட்ட சிறிய பற்றைக் காட்டுப் பகுதியில் முகத்தை மறைத்தவாறு வந்த மூவர் மோட்டார் சைக்கிளை மறித்தனர். தாயையும் மகளையும் வாளால் வெட்டி காயப்படுத்தியவர்கள் அவர்கள் அணிந்திருந்த சங்கிலி, காப்பு மோதிரம் என ஆறரை பவுண் நகைகளையும் ஒன்றரை இலட்சம் ரூபாய், கைபேசிகள் என்பவற்றையும் கொள்ளையிட்டு சென்றனர்.

காயமடைந்த 8 மாத கர்ப்பவதியான மகளும் தாயாரும் சிகிச்சைக்காக வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# வீடு புகுந்து தாக்குதல் மாணவன் படுகாயம்!

வவுனியா, ஏப். 17

மாணவர்களிடையேயான மோதலில் வீடு புகுந்து மாணவன் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டார். இதில், படுகாயமடைந்த அவர் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வவுனியா - வேப்பங்குளத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

வவுனியாவில் இரு வேறு பாடசாலை மாணவர்கள் இருவருக்கு இடையில் கடந்த சில நாட்களாக வாய்த் தர்க்கம் ஏற்பட்டு முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. எனினும், மாணவன் ஒருவரின் பெற்றோர் தலையிட்டு அவர்களை சமரசப்படுத்தி அனுப்பி வைத்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை, 60 ஏக்கர் பகுதியில் உள்ள மாணவன் ஒருவனின் வீட்டுக்குள் புகுந்த மற்றைய மாணவர்கள் அவரை கடுமையாக தாக்கிக் காயப்படுத்தி விட்டு சென்றுள்ளனர்.

இதில், காயமடைந்த 16 வயது மாணவன் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தொன்மைகள் சிதைப்புக்கு எதிராக போராட்ட ஏற்பாடுகள் நடக்கின்றன!

## ரெலோ கட்சியின் சுரேந்திரன்

யாழ்ப்பாணம், ஏப். 17

வடக்கு, கிழக்கு தாயக பூமியில் எமது தொன்மையை சிதைக்கும் வகையில் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைளுக்கு எதிராக தமிழ் மக்களை ஒன்றுதிரட்டி போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தயாராகி வருவதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை அவர், 'தமிழர்களின் தொன்மையை சிதைக்கும் வகையில் தாயகபூமியில் அரசாங்கமானது பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. இதற்கெதிராக மக்கள், அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகளை ஒன்றுதிரட்டி பெரும் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் பரந்துபட்ட தொடர்ச்சியான போராட்டமாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# மன்னாரில் சிறப்பாக நடந்த மாட்டு வண்டி சவாரி போட்டி!

மன்னார், ஏப். 17

மன்னார் - பரப்பாங்கண்டல் இரட்டை மாட்டு வண்டி திடலில் இரட்டை மாட்டு வண்டி சவாரி போட்டி சிறப்பாக நடைபெற்றது.

புத்தாண்டையொட்டி தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான இரட்டை மாட்டு வண்டி சவாரி போட்டி நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

மன்னார் மாவட்ட இரட்டை மாட்டு வண்டி சவாரி சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 35 ஜோடி காளைகள் பங்கேற்றன.



இந்தப் போட்டியானது ஏ, பி, சி, டி, ஈ என்ற 5 பிரிவுகளாக நடைபெற்றது. இவற்றில் வெற்றி பெற்ற காளைகளின் உரிமையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கையுடன் தொடர்பிலுள்ளோம்!

## சீன வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

பீஜிங், ஏப். 17

**கடன் மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பில் இலங்கையுடன் நெருங்கிய தொடர்பாடல்களை பேணி வருவதாக சீனா தெரிவித்துள்ளது.**

செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளார் வாங் வென்பிங் இதனை தெரிவித்துள்ளார்.

“இலங்கைக்கு அதிகளவு கடன்களை வழங்கிய சீனா இல்லாமல், இலங்கையும் அதற்கு கடன் வழங்கிய முக்கிய நாடுகளும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகளை ஆரம்பித்துள்ளன. இது மூன்றாம் உலக நாடுகளின் கடன் குறித்த சீனாவின் அணுகுமுறை மீது ஏற்பட்ட விரக்தியை வெளிப்படுத்து வது போலுள்ளது. சீனா இல்லாமல் பேச்சுகள் முன்னோக்கி நகர்வது குறித்த சீனாவின் நிலைப்பாடு என்ன”, என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.



இதற்கு பதிலளித்துள்ள வாங்வென்பின் இலங்கையின் கடன் நிவாரணம் குறித்த சீனாவின் நிலைப்பாட்டை நாங்கள் பல தடவை பகிர்ந்துகொண்டுள்ளோம்.

நியாயமான சுமை பகிர்வு என்ற கொள்கையின் கீழ் வர்த்தக இருதரப்பு கடன் வழங்குநர்களை இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் கலந்துகொள்ளுமாறு நாங்கள் மீண்டும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

நாங்கள் இலங்கையுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கின்றோம். கடன் மறுசீரமைப்பு விவகாரங்கள் தொடர்பில் சீனாவின் நிறுவனங்கள் இலங்கையுடன் பேச்சுகள் மேற்கொள்வதை நாங்கள் ஆதரிக்கின்றோம் - என்றும் கூறினார். (ஐ)



# திடீரென வீசிய மினி சூறாவளி; நுவரெலியாவில் 14 வீடுகள் சேதம்!

நுவரெலியா, ஏப். 17

நுவரெலியா - லிந்துலை பெசிபன் தோட்டத்தில் நேற்று வீசிய மினி சூறாவளி காரணமாக 14 வீடுகள் சேதமைந்தன. அத்துடன், 74 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை திடீரென மினி சூறாவளி ஏற்பட்டுள்ளது. இதன்போது, வீட்டின் கூரைகள் மற்றும் ஏனைய பொருட்களும் தூர இடங்களுக்கு பறந்தன என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். அத்துடன், இருவருக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டுள்ளன.

மினி சூறாவளியால் மின் கம்பங்கள் கம்பிகள் சேதமடைந்ததால் இரண்டு மணி நேரம் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்து உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தோட்ட நிர்வாகம் தேவையான நிவாரண உதவிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதோடு, சேதமான வீடுகளை புனரமைத்து தருவதாக தோட்ட நிர்வாக முகாமையாளர் மக்களிடம் தெரிவித்துள்ளார். (ஐ)

# நிபந்தனைகளின் அடிப்படையில் அரசியலில் பிரவேசிக்க தயாராம்!

## பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, ஏப். 17

சில நிபந்தனைகளின் கீழ் அரசியலில் பிரவேசிக்கத் தான் தயாராக இருக்கிறார் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

“ஒவ்வொரு பிரஜைக்கும் ஊக்கத்தையும் நம்பிக்கையையும் தரக் கூடிய ஒரு திட்டத்தை முன்வைக்க எனக்கு வாய்ப்புத் தரப்பட்டால் , நாட்டை ஒரு சிறந்த இடமாக மாற்ற நான் தயாராக இருக்கிறேன். மக்கள் சிறந்த நிர்வாகத்தையும் பக்கச் சார்பற்ற ஒருவரையும் எதிர்பார்க்கின்றனர். சில குடும்பங்களும்- சில தேர்ந்த அரசியல்வாதிகளும் 75 வருடங்களாக விளையாடி வருகின்றனர். எனவே, அனைவரின் வேண்டுகோளுக்கேற்ப அந்த மாற்றத்தை ஏற்படுத்த நான் தயாராக இருக்கின்றேன் என நினைக்கின்றேன்” என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)



# பொலிஸாரை மோதிவிட்டு தப்பிக்க முயன்றவர் கைது!

கொழும்பு, ஏப். 17

வீதிச் சந்தியில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிளை மோட்டார் சைக்கிளில் வந்தவர் மோதித் தள்ளிவிட்டு தப்ப முயன்றபோது கைது செய்யப்பட்டுள்ளார் என்று ஹபராதுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி - உனவடுன -மாதரம்ப கெகுலனோவி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஹபராதுவை பொலிஸ் நிலையத்தின் இரண்டு கான்ஸ்டபிள்கள் நேற்றுமுன்தினம் மாலை உனவடுன, எரமுதுகஹ சந்தியில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்தபோது காலியிலிருந்து மாத்தறை நோக்கி வந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனையிட்டபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ)

# இளைஞர்களுக்கு இலவசமாக ஆடு!

ஆடுகளை வளர்க்க விரும்பும் இளைஞர் சமூகத்தினருக்கு 70 ஆயிரம் ஆடுகளை இலவசமாக விநியோகம் செய்வதில் விவசாய அமைச்சு கவனம் செலுத்துகிறது.

இதன்படி, வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு இந்த ஆடுகள் வழங்கப்படும்.

தேவையான தொழில்நுட்பம் மற்றும் உயர்தர ஆடுகளை வழங்குவதற்கு தனியார் துறையின் ஆதரவைப் பெறுவதற்கு தாங்கள் செயல்பட்டு வருவதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

ஜமுனாபரி, கொட்டுகச்சி, போயர், சனான் ஆகிய ஆடு இனங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மின்னல் தாக்கி சிறுவன் பலி இரண்டு சிறுவர்கள் பாதிப்பு!

கொழும்பு, ஏப். 17

மின்னல் தாக்கியதில் 12 வயது சிறுவன் உயிரிழந்தார். அத்துடன், இரண்டு சிறுவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு - அவிசாவளை - ருவன்வெல்ல - மாப்பிட்டிகம பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

களனி ஆற்றில் நீராடி விட்டு வீடு திரும்பியவர்களையே மின்னல் தாக்கியது. இதில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அவிசாவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# அரசின் உள்ளக பொறிமுறையை தமிழர் ஆதரித்தேயாக வேண்டும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிபட தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 17

“உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கு - உள்ளகப் பொறிமுறைக்கு பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஆதரவளித்தே ஆக வேண்டும். இதை எதிர்க்கும் கருத்துக்கள் தொடர்பில் நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்குவதற்கான சட்டவரைவு மேற்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. ஆனால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை - உள்ளகப் பொறிமுறையை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பிய போது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைப்பது தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான தீர்மானத்தின் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது காணாமல் ஆக்கப்பட்டோர் உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பில் அதற்குப் பொறுப்புக் கூறுவது தொடர்பிலும், அரசின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவும் அந்த ஆணைக்குழு மிகவும் அவசியம்.

இலங்கை இறைமையுள்ள நாடு. எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் இதற்கு ஆதரவளித்தே தீரவேண்டும். அதைவிடுத்து சர்வதேசம்தான் தீர்வைத் தரும் என்று காத்திருப்பவர்கள் குறித்தோ, ஆணைக் குழுவை எதிர்ப்பது தொடர்பிலோ நான் கருத்துக் கூற விரும்பவில்லை அதுபற்றி அலட்டிக்கொள்ளவும் விரும்பவில்லை.

நாட்டின் அதியுயர் சபையில் சட்டவரைவைத் தயாரித்து ஒப்படைப்போம். அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் எங்களின் விருப்பம்.” - என்றார். (ஐ)

# எதிர்வரும் 20ஆம் திகதி கட்சி தலைவர்கள் கூட்டம்!

கொழும்பு, ஏப் 17

எதிர்வரும் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் அன்று முற்பகல் 11 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளதாக பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

புத்தாண்டுக்குப் பிறகு நடைபெறும் முதல் கட்சித் தலைவர்கள் கூட்டம் இது வாகும். இதன்படி, இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை, புத்தாண்டின் பின்னர் முதலாவது பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ஐ)

# அனைத்து அரச நிறுவனங்களையும் விசாரணைக்கு அழைக்க தீர்மானம்!

## கோப் குழு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 17

**அனைத்து அரச நிறுவனங்களையும் விசாரணைக்காக கோப் குழு முன்னிலையில் அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.**

இதன்படி, 420 அரச நிறுவனங்களை கோப் குழு முன் அழைக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பிரகாரம், வருடாந்தம் அரச நிறுவனங்களை கோப் குழுவின் முன் அழைக்க வேண்டும் என்ற போதிலும், அது சரியான முறையில் செய்யப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த மாதம் மேலும் நான்கு அரச நிறுவனங்கள் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்படவுள்ளன.

இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், காணி சீர்திருத்த ஆணைக்குழு, இலங்கை விமான சேவை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன கோப் குழுவின் முன்னிலையில் அழைக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பிஸ்கெற் உற்பத்திக்கான அரிசி இனம் அறிமுகம்!

கொழும்பு, ஏப். 17

பிஸ்கெற் உற்பத்திக்கு பயன்படுத்தக்கூடிய புதிய 'அரிசி' ரகத்தை படலகொட நெல் ஆராய்ச்சி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வகை பி. ஜி. 381 என்று பெயரிடப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே. பி. சேனநாயக்க தெரிவித்தார்.

பிஸ்கெற் உற்பத்திக்கு தேவையான அரிசி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த அரிசி வகையை பிஸ்கெற் தொழில் துறையில் அதிக வெற்றிகரமான முறையில் பயன்படுத்த முடியும் எனவும் பட்டலகொட அரிசி ஆராய்ச்சி நிறுவனம் இந்த அரிசி வகையை கண்டுபிடித்திருப்பது ஒரு சாதனை எனவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நெல் ரகம் ஓரளவு மகசூல் தரக்கூடியது, ஏக்கருக்கு நான்கு மெட்ரிக் தொன் மகசூல் தருகிறது. வறண்ட பிரதேசத்திற்கு இந்த நெல் வகை பொருத்தமானது எனவும் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் அதிக வெப்ப காலநிலை நிலவும்!

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்து!

கொழும்பு, ஏப்.

நாட்டின் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கொழும்பு, கம்பஹா, குருநாகல், மொனராகலை அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் கிழக்கு வட மத்திய மாகாணங்களிலும் பகுதிகளில் அதிக வெப்பமான காலநிலை நிலவும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் மனிதர்களால் உணரப்படும் வெப்பம் அவதானம் செலுத்தப்படும் மட்டத்தில் இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வெப்பமான காலநிலை சில நாட்களுக்கு தொடரும். இந்த காலகட்டத்தில் நீரிழப்பு போன்ற நிலைமைகள் ஏற்படலாம். வெப்பமான காலநிலை நிலவும் இடங்களில் வேலை செய்பவர்கள் போதுமான நீரை அருந்த வேண்டும்.

மேலும், முடிந்தளவு நிழலில் ஓய்வெடுக்க வேண்டும். வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும். வாகனங்களில் செல்பவர்கள் சிறு குழந்தைகளை தனியாக வாகனங்களில் விட்டு செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய நாட்களில் வெள்ளை நிற ஆடைகளை அணிய வேண்டும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வெப்பமான காலநிலை காரணமாக கால்நடைகள் அதிகம் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நிலவும் அதிக வெப்பமான காலநிலை காரணமாக விலங்குகளுக்கான தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும். இதன் போது போதுமான தண்ணீரை கால்நடைகளுக்கு வழங்கவேண்டும். மேலும் அவற்றை மூடப்பட்ட கூடாரங்களில் நிறுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# நில நடுக்கங்கள் தொடர்பான வரைபடத்தை தயாரிக்க முடிவு

கொழும்பு, ஏப். 17

கடந்த காலங்களில் இலங்கையின் பல்வேறு இடங்களில் ஏற்பட்ட நிலநடுக்கங்கள் தொடர்பான தரவுகளைப் பெற்று நிலநடுக்க அபாய நிலைமைகளை காட்டும் வரைபடத்தைத் தயாரிப்பதற்கு புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்ட இடம், அதன் அளவு போன்ற தரவுகள் இதில் பயன்படுத்தப்படும். இவ்வாறான வரைபடம் இது வரை தயாரிக்கப்படவில்லை என பணியகத்தின் சிரேஷ்ட புவியியலாளர் நில்மினி தல்தேன தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டுக்கு முன்னர் நிலநடுக்கம் ஏற்படும் அபாயம் குறைவாக இருந்ததாகவும் 2004ஆம் ஆண்டுக்குப் பிறகு நிலநடுக்கம் குறித்த தரவுகளைச் சேகரித்து அவற்றைக் கண்காணிப்பதில் கவனம் செலுத்தப்பட்டதாகவும் அந்தத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு இந்த வரைபடம் தயாரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உதாரணமாக, கொழும்பில் நிலநடுக்கம் ஏற்பட்டால், அந்த பகுதியில் நிலநடுக்கம் எப்படி உணரப்படும் என்பதை இந்த வரைபடம் தெரிவிக்கும்.

இந்த நோக்கத்துக்கா, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் பல்லேகல, மஹகனதரவ, ஹக்மன மற்றும் புத்தல ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட நில அதிர்வு நிலப்பரப்புகளிலிருந்து தரவுகளைப் பெறுகிறது. இதேவேளை மேல் மாகாணத்திலும் நில அதிர்வு மானியை நிறுவுவது தொடர்பில் புவியியல் ஆய்வுகள் மற்றும் சுரங்கப் பணியகத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு பாராட்டு!

கொழும்பு, ஏப். 17

பொருளாதார மீட்சிக்காக இலங்கை எடுத்துள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சிக்குரியது. சமூக கட்டமைப்பில் அவதானத்துக்குரிய தரப்பினரை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்புக்கள் வெற்றி பெற வேண்டுமாயின், வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு உலக வங்கிக்கான தெற்காசிய தலைவர் மார்ட்டின் ரேஸர், நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவிடம் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் நடைபெற்ற ஸ்ப்ரிங் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுடனான கலந்துரையாடல் தொடர்பில் உலக வங்கிக்கான தெற்காசிய தலைவர் மார்ட்டின் ரேஸர் ட்விட்டர் வலைத்தளத்தில் இவ்வாறு பதிவேற்றம் செய்துள்ளார்.

இலங்கையின் நிதி மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்களின் முன்னேற்றத்தன்மை மகிழ்ச்சிக்குரியது. சமூக கட்டமைப்பில் அவதானத்துக்குரிய தரப்பினரை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வெற்றி பெற வேண்டுமாயின், வெளிப்படைத்தன்மை வெகுவாக பேணப்பட வேண்டும்.

பொருளாதார மீட்சிக்காக உலக வங்கி இலங்கைக்கு ஆலோசனை மற்றும் நிதி ஒத்துழைப்புக்களை தொடர்ந்து வழங்கும். புதுப்பிக்கத்தக்க வளங்கள், டிஜிற்றல் மற்றும் கல்வி மேம்பாடு உள்ளிட்ட முக்கிய துறைகள் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

ஸ்ப்ரிங் மாநாட்டுக்கு இணையாக உலக வங்கி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கோவிட் பெருந்தொற்று, பொருளாதார பாதிப்பு உள்ளிட்ட பிரச்னைகளுக்கு மத்தியிலும் அரசாங்கம் கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளது. டிஜிற்றல் துறை சார்ந்த கற்கைநெறிகளுக்கு அதிக நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# அரசாங்கம், ஜனாதிபதிக்கு ஆதரவா? ராஜித அறிக்கை வெளியிட வேண்டும்!

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஏப். 17

தற்போதைய அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் ஆதரவளிப்பதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் உடனடியாக அறிக்கை வெளியிடுமாறு பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன விடம் ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள் விடுத்துள்ளது.

எவ்வாறாயினும், தற்போதைய அரசாங்கத்தில் இணைந்து கொள்வதாக ஊடகங்களில் வெளியான அனைத்து செய்திகளையும் ராஜித சேனாரத்ன நிராகரித்துள்ளார் என்று கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுகாதார அமைச்சர் பதவியை வழங்கினால் அதனை ஏற்கத் தயார் என அண்மையில் சேனாரத்ன தெரிவித்தார் என்று கூறப்படும் அறிக்கை தொடர்பில் ஆராய ஐக்கிய மக்கள் சக்தி குழுவொன்றை நியமித்துள்ளது.

இந்தக் குழு அண்மையில் கூடியபோது பாராளுமன்ற உறுப்பினர் சேனாரத்னவை விசாரணைக்கு அழைத்துள்ளது. இதன்போது, தற்போதைய அரசாங்கத்தையோ அல்லது ஜனாதிபதியையோ ஆதரிப்பதாக எந்தக் கருத்தையும் தான் வெளியிடவில்லை எனவும், ஊடகங்களால் தனது அறிக்கை திரிபுபடுத்தப்பட்டதாகவும் சேனாரத்ன தெரிவித்தார் என்று பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

# இந்தியா VS பாகிஸ்தான்: முஸ்லிம் மக்கள்தொகை!

## இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியது எவ்வளவு உண்மை?

ஷ்ருதி மேனன், ஷதாப் நஸ்மி



இந்தியாவில் வாழும் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை குறித்து இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பல்வேறு கருத்துகளை முன் வைத்துள்ளார்.

தனது அமெரிக்க பயணத்தின்போது பேசிய நிர்மலா சீதாராமன், பாஜக ஆட்சியின்கீழ் முஸ்லிம்களின் நிலை மோசமாக உள்ளது என்ற கருத்தை நிராகரித்தார்.

**"இரண்டாவது பெரிய முஸ்லிம் நாடு"**

பாஜக ஆட்சியின் கீழ் இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் நிலை குறித்து நிர்மலா சீதாராமனிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு அளித்த பதிலில், 'உலகிலேயே மக்கள் தொகை அடிப்படையில் முஸ்லிம் அதிக மாக வாழும் இரண்டாவது பெரிய நாடு இந்தியா," என்று குறிப்பிட்டார்.

இந்தக் கூற்றை உறுதி செய்வது சற்று கடினமானது. ஏனெனில், இந்தியாவின் அதிகாரப்பூர்வ மக்கள்தொகை கணக்கெடுப்பு தரவுகள் அண்மையில் எடுக்கப்பட்டவை அல்ல. இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கடைசியாக 2011ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

அமெரிக்காவில் இருந்து செயல்படும் பியூ ஆராய்ச்சி மையம் 2020ஆம் ஆண்டில், இந்தோனேசியாவுக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது பெரிய முஸ்லிம் மக்கள்தொகையைக் கொண்டுள்ள நாடு இந்தியாதான் என்று கூறியிருந்தது. இந்தப் பட்டியலில் மூன்றாவது இடத்தில் பாகிஸ்தான் உள்ளதாகவும் மதிப்பிட்டுள்ளது.

இந்தியா குறித்த இந்த மதிப்பீடு 2011ஆம் ஆண்டு இந்திய அரசால் வெளியிடப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதேபோல பாகிஸ்தான் குறித்த இந்த மதிப்பீடும் 2017ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பாகிஸ்தானின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டது.


ஆனால், பாகிஸ்தானின் மக்கள்தொகை கணக்கெடுப்பு குறித்த புள்ளி விவரங்களின் நம்பகத்தன்மை குறித்து நிபுணர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

2017ஆம் ஆண்டு பாகிஸ்தானில் நடந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில், கராச்சி, சிந்த், பலுசிஸ்தான் போன்ற சில மாகாணங்களில் முழு கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை என சில புகார்கள் எழுந்தன.

பியூ ஆராய்ச்சி நிறுவனத்தின் மதத்துறை இணை இயக்குநர் கான்ராட் ஹாக்கெட், "பாகிஸ்தானில் சில நிலையற்ற தன்மை காணப்படுகிறது. அதனால் இந்தியாவைவிட பாகிஸ்தானில் முஸ்லிம்கள் எண்ணிக்கை இப்போது அதிகமாகியிருக்க வாய்ப்புள்ளது," என்று தெரிவித்தார்.

**"எண்ணிக்கையில் மட்டுமே வளர்ச்சி"**

இந்தியாவின் முஸ்லிம் மக்கள்தொகை, அதிக எண்ணிக்கையில் வளர்ந்து வருகிறது என்று நிர்மலா சீதாராமன் சொல்வது உண்மைதான். ஆனால் ஒட்டுமொத்த இந்திய மக்கள்தொகை அதிகரிப்பதன் விளைவாக, மற்ற அனைத்து மதத்திலும் மக்கள்தொகை எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.




ஆனால் மக்கள் தொகையின் மொத்த வளர்ச்சி விகிதத்தைப் பார்க்கும் போது, அதன் சராசரி விகிதம் குறைந்து வருவதை நாம் பார்க்க முடிகிறது.

1991ஆம் ஆண்டு முதல் முஸ்லிம்களின் மக்கள்தொகை எண்ணிக்கை அதிகரிக்கும் விகிதமும் மொத்த மக்கள் தொகை அதிகரிக்கும் விகிதமும் குறைந்து வருகிறது.

2019ஆம் ஆண்டு வெளியான தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பின் அதிகாரபூர்வ தரவுகளின்படி, முஸ்லிம் மக்கள் மதப்பிரிவுகளின் அடிப்படையில் அதிக கருவுறுதல் விகிதத்தைக் கொண்டுள்ளனர்.

ஆனால் இந்த எண்ணிக்கை கடந்த 20 ஆண்டுகளில் மிகக்கடுமையான சரிவைக் கண்டுள்ளது என்று தரவுகள் தெரிவிக்கின்றன.

உண்மையில், இந்துக்களைவிட முஸ்லிம்களின் மக்கள் தொகை வீழ்ச்சி விகிதம் கடுமையாக உள்ளது. இது 1992இல் 4.4 பிறப்புகளிலிருந்து 2019இல் 2.4 ஆக குறைந்ததுள்ளது.

சமூக, பொருளாதார காரணிகளால் கருவுறுதல் விகிதங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது குறைய மதரீதியான இணைப்பு ஏதுமில்லை என்கிறார், இந்திய மக்கள்தொகை அறக்கட்டளையைச் சேர்ந்த சங்கமித்ரா சிங்.

"சிறந்த கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரத்தால் கருவுறுதல் விகிதங்கள் குறைந்துள்ளன," என்று அவர் கூறுகிறார்.

ஆயினும், சில இந்து குழுக்களும், பாரதிய ஜனதா கட்சியின் அரசியல் தலைவர்களும், முஸ்லிம் மக்கள்தொகையின் வளர்ச்சி குறித்து தவறான கூற்றுகளைத் தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர்.

இன்னும் சிலர், இந்துக்கள் அனைவரும் அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கின்றனர்.

இந்திய மக்கள் தொகையில் சுமார் 80 வீதமாக இருக்கும் பெரும்பான்மை இந்து மதத்தினரின் எண்ணிக்கையைவிட முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று சிலர் முன்வைக்கும் கருத்துகளை நிபுணர்கள் முற்றிலும் நிராகரிக்கின்றனர்.

குடும்ப நலத் திட்டத்தை மறுஆய்வு செய்வதற்கான தேசிய குழுவின் முன்னாள் தலைவர் தேவேந்திர கோத்தாரி, மாறுபட்ட எதிர்கால சூழ்நிலையைக் கணித்துள்ளார்.

கருவுறுதல் விகிதங்களில் ஏற்பட்டுள்ள சரிவின் அடிப்படையில், அடுத்த கணக்கெடுப்பில் மொத்த மக்கள் தொகையில் இந்துக்களின் விகிதம் முஸ்லிம்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது அதிகரித்திருக்கும் என்று அவர் கூறுகிறார்.

**"இந்தியாவில் முஸ்லிம்களின் நிலை"**

1947ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்த முஸ்லிம் மக்கள் தொகை, தற்போது எத்தனை மடங்கு அதிகரித்திருக்கிறது என்பதைப் பாருங்கள். பாஜக ஆட்சியின் கீழ் இந்தியாவில் வாழும் முஸ்லிம்களின் நிலை குறித்துப் போலியான கட்டமைப்புகள் முன்வைக்கப்படுகின்றன. உண்மை நிலையை அறிந்து இந்தியாவுக்கு வந்து சுற்றிப் பாருங்கள் என நிர்மலா சீதாராமன் கூறியிருந்தார்.

இந்தியாவில், முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்பு அதிகரித்து வருவதாக வெளியாகும் செய்திகளை, சீதாராமன் சுட்டிக்காட்டினார். இந்த நிலை இருக்கிறதா என்று நேரில் வந்து பார்க்குமாறு செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

இந்திய முஸ்லிம்கள் வணிகம் செய்யவும், தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கவும், அரசின் உதவியைப் பெற முடியும் என்றும் அவர் கூறினார்.

முஸ்லிம்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரைக் குறிவைத்து, அதிகரித்து வரும் தாக்குதல், கொலைகள் மனித உரிமை அமைப்புகளால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

2023ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையில், பாஜக தலைமையிலான அரசு "மத சிறுபான்மையினர், குறிப்பாக முஸ்லிம்கள் மீது திட்டமிட்ட பாகுபாட்டுடன் செயல்படுகிறது," என்று கூறியுள்ளது.

மத சிறுபான்மையினருக்கு எதிராக நடைபெறும் குற்றங்கள் குறித்து அதிகாரபூர்வ தரவுகள் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் சுயாதீன ஆராய்ச்சியாளர்கள், சில அமைப்புகள் இந்தியாவில் வெறுப்பு குற்றங்கள் அதிகரிப்பது குறித்த தகவல்களை ஒருங்கிணைத்துள்ளன.

**"பாகிஸ்தானில் குறையும் சிறுபான்மையினர் எண்ணிக்கை"**

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பாகிஸ்தானில் சிறுபான்மையினருக்கு எதிராக நடைபெறும் வன்முறைகளை மேற்கோள் காட்டிய நிர்மலா சீதாராமன், இதன் விளைவாக முஸ்லிம் அல்லாதவர்களின் எண்ணிக்கை பாகிஸ்தானில் குறைந்து வருவதாகக் கூறினார்.

பாகிஸ்தான் ஒரு முஸ்லீம் பெரும்பான்மை நாடாகும். 2017ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, மத சிறுபான்மை குழுக்களில் இந்துக்கள் (2.14 வீதம்), கிறிஸ்தவர்கள் (1.27 வீதம்), அகமதியர்கள் (0.09 வீதம்) இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

பாகிஸ்தானில் வாழும் சிறுபான்மையினர் துன்புறுத்தலுக்கும் வன்முறைக்கும் இலக்காகியுள்ளனர் என்பது உண்மைதான்.

பாகிஸ்தானின் கடுமையான மத போதனை சட்டங்களின் மூலம் அகமதியர் முஸ்லிம் சமூகம் மீது சட்ட வழக்குகளும் தாக்குதலும் அரங்கேறுவதாக மனித உரிரம கண்காணிப்பக 2020 அறிக்கை கூறுகிறது.

கிறிஸ்தவர்களும் இந்துக்களும் மத போதனை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

**பாகிஸ்தானின் மத போதனை சட்டங்கள் என்ன?**

1987ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை, 1,855 பேர் வரை மத போதனை தடுப்புச் சட்டங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் என்று பாகிஸ்தானை சேர்ந்த மனித உரிமை அமைப்பான சமூக நீதிக்கான மையம் தெரிவித்துள்ளது.

ஆனால் நிர்மலா சீதாராமன் கூறுவதைப் போல பாகிஸ்தானில் சிறுபான்மையினர் எண்ணிக்கை குறைந்து விட்டது குறித்தோ, அழிந்துவிட்டது குறித்தோ உறுதி செய்ய போதுமான தரவுகள் இல்லை.

1947க்குப் பிறகு பாகிஸ்தானில் முஸ்லிம் அல்லாதவர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது என்ற பாஜகவின் கூற்றுகள் குறித்து பகுப்பாய்வு செய்து பார்க்கப்பட்டது.

அதில் பயன்படுத்தப்பட்ட புள்ளிவிவரங்கள், கிழக்கு பாகிஸ்தான் பகுதியாக முன்பு இருந்த வங்கதேசத்தின் சிறுபான்மை மக்களின் எண்ணிக்கையையும் உள்ளடக்கி இருக்கிறது என்பதை கண்டறிய முடிந்தது. இந்த எண்ணிக்கையை உள்ளடக்கிக் கூறுவதன் மூலம் புள்ளி விவரங்களை தவறாக வழிநடத்தியது உறுதியாகிறது. (பிபிசி)

# ‘சமுத்திரன் எழுத்துக்கள்’ அவசியமான அரசியல் சமூக ஆவணம்



வீரகத்தி தனபாலசிங்கம்

புலம்பெயர்ந்து உலகின் பல நாடுகளிலும் வாழும் இலங்கை தமிழ் பேசும் சமூகத்தின் மத்தியில் இன்று இருக்கக்கூடிய அறிவுஜீவிகள், சிந்தனையாளர்கள் மற்றும் கல்விமான்கள் மத்தியில் மிகவும் குறிப்பிடத் தக்க ஒருவர் பேராசிரியர் என். சண்முகரத்தினம். சுமார் நான்கு தசாப்தங்களாக நோர்வேயில் வாழ்ந்துவரும் அவரின் பல்கலைக்கழக கல்வி, அதன் ஆய்வுத்துறை சார்ந்த பங்களிப்புகளுடன் அரசியல் சமூகம் சார்ந்த எழுத்து மற்றும் சிந்தனைப் பங்களிப்புகளும் மிகவும் முக்கியமானவை.

இளவயதில் இருந்தே இடதுசாரி அரசியலில் ஆர்வத்தை கொண்டிருந்த அவர் 1960 களின் நடுப்பகுதியில் இருந்து சொந் தப் பெயரிலும் சமுத்திரன் எனும் புனை பெயரிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அரசியல், சமூக விடயங்கள் மற்றும் கலை இலக்கியம் தொடர்பான சிந்தனையை தூண்டும் பெருவாரியான கட்டுரைகளை எழுதிவந்திருக்கிறார்.

அவரின் கட்டுரைகளின் மத்தியில் இருந்து தெரிந்தெடுத்து “சமுத்திரன் எழுத்துக்கள்” என்ற தலைப்பில் நான்கு தொகுப்பு நூல்களை லண்டனில் இயங்கும் சமூக இயல் பதிப்பகம் வெளியிட்டி ருக்கிறது. வெளியீட்டு வைபவம் நோர்வேயில் கடந்த மாதம் 25 ஆம் திகதி நடைபெற்றது. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் உள்ள அரசியல், சமூக, கலை இலக்கிய ஆர்வலர்களும் செயற்பாட்டா ளர்களும் பல ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் வந்து அந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

சமுத்திரன் எழுத்துக்கள் தொகுதி 01 ‘இலங்கை மீள் சிந்திப்புக்கான சில முன் மொழிவுகள்” என்ற தலைப்பில் தேசிய இனப்பிரச்சினை, பெருந்தேசியவாதம், இலங்கை இடதுசாரிகள், தமிழ் தேசிய வாதம், இந்திய மேலாதிக்கம், தேசியக் கொடி, நிலம், பொருளாதாரம், அபிவிருத்தி, சமூக மேம்பாடு, தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக மக்கள், சிங்களவர்கள், புலம்பெயர் சமூகம் என்ற என்ற விடயதானங்களை அலசும் 13 கட்டுரைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது.

தொகுதி 02 மாக்சியம், முதலாளித்துவம், இயற்கை, ஜனநாயகம், மூலதனம், உலகமயமாக்கம், நவதாராளவாதம், தொழிலாளர் வர்க்கம், ஏகாதிபத்தியம், யுத்தம், சமாதானம், கொவிட் என்ற விடயதானங்களை அலசும் பத்து கட்டுரை களை உள்ளடக்கியதாக இருக்கிறது.

தொகுதி 03 கலை இலக்கியம், சமூகம், அரசியல், உரையாடல், விவாதம், எதிர்வினை, வாசிப்பு, நினைவு அஞ்சலி என்பவற்றை பற்றிய 12 கட்டுரைகளை கொண்டிருக்கிறது.

தொகுதி 04 இலங்கை தேசிய இனப் பிரச்சினை, சிங்கள பெரும்தேசிய இனவா தத்தின் அடிப்படைகளும் மேலாதிக்கமும் பற்றி அலசும் நான்கு கட்டுரைகளை உள் ளடக்கியதாக இருக்கிறது.

நான்கு தொகுதிகளுக்கும் பதிப்புரையை எழுதியிருக்கும் லண்டனில் வாழும் கலை இலக்கிய மற்றும் சமூக செயற்பாட்டாள ரான எம்.பௌசர், “கடந்த காலத்தை கறாராக மீள்மதிப்பிடுவது மட்டுமல்ல இன்றைய காலத்தின் அரசியல் மற்றும் சமூகத் தளங்களை செப்பனிட்டு முன்னோக்கிச் செல்லவேண்டிய தேவையும் அவசியமும் நம்முன் உள்ளது. அதற்கான அடிப்படைகளையும் சமூக நீதிக்கும் சமத்துவத்துக்குமான மனிதத்தின் அடியாளத்தை சமுத்திரன் எழுத்துக்கள் நம் முன்வைக்கின்றன, வலியுறுத்துகின்றன” என்று குறிப்பிட்டிருக்கிறார்.


சண்முகரத்தினம் நீண்டகால அரசியல், சமூகச் செயற்பாட்டையும் அறிவார்ந்த பங்களிப்புமிகு நம் காலகட்டத்தின் பல்துறை ஆற்றல்களையும் கொண்ட ஒரு அறிவாளர். இந்த தொகுப்புகளில் உள்ள எழுத்துக்கள் இலங்கையின் கடந்த அறுபது வருடங்களுக்கும் மேற்பட்ட சமூக அரசியல் வரலாற்றின் மிகவும் முக்கியமான பதிவுகளாகும்.


இவை சமுத்திரன் என்கிற ஒரு தனிம னிதரின் கருத்துக்கள், பார்வைகள் என்ப தனையும் தாண்டி இலங்கையின் சமூக, அரசியல், பொருளாதார வரலாற்றின் மிக முக்கிய பதிவுகளாக மாறும் விரிந்த அரசி யல் பண்பைக் கொண்டவையாகும். இந்த வரலாற்றில் ஈடுபாடும் கற்றலுக்கான தேடல் கொண்டோருக்கும் நிகழ்காலத் திலும் எதிர்காலத்திலும் இலங்கைவாழ் அனைத்து மக்களினதும் சமத்துவமான இருப்பிலும் வாழ்விலும் அக்கறையும் அரசியல் நோக்கமும் கொண்ட மக்கள் ஜனநாயகப் பிரிவினருக்கும் சமுத்திரன் எழுத்துக்கள் மிக அவசியமான அரசியல், சமூக ஆவணமாகும் என்றும் பௌசர் கூறியிருக்கிறார்.


இந்த தொகுப்பு நூல்களில் உள்ள எழுத்துக்கள், மதிப்பீடுகள், கருத்துக்கள் தான் வரித்துக்கொண்ட அரசியல் கருத்து நிலையை அடிப்படையாகக் கொண்ட பார்வைகள்தான் என்பதை கூறும் சண்மு கரத்தினம் நூல்கள் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை மற்றும் நிலைபெறு மனித மேம்பாடு ஆகியவற்றை மக்கள் ஜனநாயகத்துக்கான போராடடத்துடன் இணைக்கும் சவால் பற்றிய திறந்த விவாதங்களுக்கு உதவுமாயின் பெரும் நன்றியுடையவனாக இருப்பேன் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த தொகுப்புக்கள் எப்போதோ வெளிவந்திருக்க வேண்டியவை என்று கூறியிருக்கும் பதிப்பாசிரியர் பௌசர் காலத்தின் தேவையான இந்த பணியை அர்ப்பணிப்புடன் செய்தமைக்காக மிகுந்த பாராட்டுக்குரியவர். ●







# செங்குரங்குகளை மாத்திரமல்ல மயில்களையும் ஏற்றவேண்டும்!

## ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது

கொழும்பு, ஏப். 17

குரங்குகளை மட்டுமல்ல மயில்களையும் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

சீனாவுக்கு செங்குரங்குகளை ஏற்றுமதி செய்யும் யோசனை குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



குரங்குகள் மட்டுமன்றி மயில்களும் பயிர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்துகின்றன. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் உட்பட செங்குரங்குகளை ஏற்றுமதி செய்வதை எதிர்க்கும் தரப்பினர், வண்ணாத்தி வில்லு, ஆனமடுவ, அநுராதபுரம் ஆகிய பகுதிகளுக்குச் சென்று தோட்டங்களுக்கு இந்த குரங்குகள் மற்றும் மயில்களால் ஏற்படுத்தும் பாதிப்புகளால் விவசாய சமூகம் அனுபவிக்கும் இழப்பையும் காண வேண்டும்.

“அரசாங்கம் ஏதாவது செய்ய முடிவு செய்யும் போதெல்லாம் எப்போதும் சில அரசியல் தலைவர்களும், அரசு அதிகாரிகளும் அரக்கர்களை உருவாக்குகிறார்கள். இப்போது சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அரக்கர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்” என்றும் கூறினார். (ஐ)

# யாழ்ப்பாணத்தில் பாரம்பரிய உணவுத் திருவிழா நடந்தது!

யாழ்ப்பாணம், ஏப். 17

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் முற்றவெளி மைதானத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட யாழ்ப்பாண பாரம்பரிய உணவுத் திருவிழா நேற்று முன்தினம்ஆரம்பமானது.

நேற்றைய தினமும் இந்த உணவுத் திருவிழா நடைபெற்றது.

நேற்று முன்தினம் ஆரம்பமான நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பாரம்பரிய உணவு வகைகளை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்துவது, உள்ளூர் முயற்சியாளர்களை ஊக்குவிப்பது இந்த உணவுத் திருவிழாவின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த உணவுத் திருவிழா வின்போது பாரம்பரிய இசை நிகழ்வும் இடம்பெற்றது. அதில் பங்கேற்ற கலைஞர்களை கௌரவித்து அமைச்சர் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். (ஐ)

# மின் கட்டணத்தை திருத்த அனுமதி!

கொழும்பு, ஏப். 17

செலவுக்கு ஏற்ற மின் கட்டண திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், கட்டண திருத்தத்தின் மூலம் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதை அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளதாக கூறியுள்ளார்.

வருடத்துக்கு இரண்டு தடவைகள் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மின் கட்டணத்தை மாற்ற முடியும். ஜூலை மாத நிலவரத்தின் அடிப்படையில் அடுத்த கட்டணத் திருத்தம் தீர்மானிக்கப்படும்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின் கட்டணத்தை குறைத்து சலுகையை வழங்க முடியுமா என்பது குறித்து ஆராய வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

# ரஞ்சித் சியம்பலபிட்டிய விபத்தில் காயம்!

கொழும்பு, ஏப். 17

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலபிட்டிய பயணித்த சொகுசு ஜீப் வீதியை விட்டு விலகி சுவரில் மோதி விபத்துக்குள்ளானதில் அவர் சிறு காயத்துக்கு இலக்கானார்.

இந்த விபத்து கேகாலை - அவிசாவளை பிரதான வீதியின் ருவன்வெல்ல - வெந்தல பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்றது.

இதேவேளை, அவருடன் பயணித்த மெய்ப் பாதுகவலர் ஒருவர் கடுங்காயங்களுக்கு இல்கானார் என்ற அறிய வருகின்றது. (ஐ)






# கிழக்கை மீட்டெடுப்பதற்கு உறுதியான தலைமைத்துவத்தை ஏற்படுத்துவோம்!



## இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்

காரைதீவு, ஏப். 17

**சுமந்திரனோ, சம்பந்தன் ஐயாவோ வந்து கிழக்கை மீட்க முடியாது. முன்னாள் தளபதி இங்கு வந்து வீர வசனங்களை பேசி உசிப்பேற்றிவிட்டு போய்விட்டார். இன்றும் தமிழ் மக்கள் நிர்க்கதியாக இருக்கின்றார்கள் என்று தெரிவித்துள்ளார் பிள்ளையான் என்று அறியப்பட்ட இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன்.**

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் உறுதியான தலைமைத்துவத்தை ஏற்படுத்தி மாகாணத்தை மீட்டு கட்டியெழுப்ப எமது கட்சி முயற்சி எடுத்து வருகிறது. நிச்சயமாக கிழக்கை கட்டியெழுப்ப முடியும். எனவே அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

காரைதீவு விளையாட்டு கழகத்தில் நடந்த வெள்ளிவிழா சித்திரை புத்தாண்டு கலாசார விளையாட்டு விழாவில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், கிழக்கில் அம்பாறை மாவட்டம் தனித்துவமானது. இங்கு தமிழ் மக்கள் இன்னொரன்ன சவால்களையும் பிரச்னைகளையும் எதிர்கொண்டு வருகின்றார்கள். உகந்தைமலையில் சிலை அமைக்க வேண்டும். இன்னும் பல பிரச்னைகள் இருக்கின்றன. இவற்றை வென்றெடுக்க வேண்டுமானால், அம்பாறை மாவட்டத்துக்கு என்று தனித்துவமான அரசியலை முன்கொண்டு செல்ல வேண்டும்.

பிரதேச சபை என்றாலும் சரி மாகாண சபை என்றாலும் வெவ்வேறு தீர்மானம் வேண்டும். பாராளுமன்றம் என்றால் மற்றுமொரு விதமான தீர்மானம் எடுக்க வேண்டும். ஜனாதிபதி தேர்தல் என்றால் இன்னும் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். அப்படியென்றால் மட்டுமே அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சாத்தியமாகும். இல்லாவிட்டால் நாங்கள் எதையும் பெற முடியாது. நடுத்தெருவில் நிற்க வேண்டிவரும் .

1960 ஆம் ஆண்டுக்கு பின்னர் மட்டக்களப்பிலிருந்து பிரிந்து அம்பாறை மாவட்டம் தோற்றம் பெற்றபோது காரைதீவு, தம்பிலுவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு என்று பல தனித்துவமான தமிழ் கிராமங்கள் போராட்டத்தில் அதிக அக்கறையை பங்களிப்பை செய்தன. அதன் காரணமாக பல பின்னடைவுகளையும் சந்தித்தன. எப்படி இருந்தாலும் கிழக்கின் ஓர் அங்கமே அம்பாறை மாவட்டம். எனவே, அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் கலாசார பாரம்பரியங்கள் பொருளாதார அபிவிருத்தி கல்வி விருத்தி போன்றவற்றில் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற அனைவரும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

இங்கு மீட்பர்கள் என்று பலரும் வருவார்கள். சுமந்திரனோ, சம்பந்தன் ஐயாவோ வந்து கிழக்கை மீட்க முடியாது. முன்னாள் தளபதி இங்கு வந்து வீர வசனங்களை பேசி உசிப்பேற்றிவிட்டு போய்விட்டார். இன்றும் தமிழ் மக்கள் நிர்க்கதியாக இருக்கின்றார்கள். எனவே, உறுதியான - தரமான தலைமைத்துவங்களை கிழக்கிலே ஏற்படுத்த வேண்டும் என்று எமது தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி மும்முரமாக பயணித்து வருகின்றது.

மட்டக்களப்பு எவ்வாறு உள்ளதோ அவ்வாறு அம்பாறை மாவட்டத்திலும் உங்களது ஒத்துழைப்பு இருக்குமாக இருந்தால் கிழக்கை மீட்டெடுத்து அபிவிருத்தி செய்வது ஒரு பெரும் பிரச்னையாக இருக்காது.

நாங்கள் தரமான - உறுதியான தலைவர்களை தேடி அவர்களை உருவாக்கி வருகின்றோம். அதனூடாக நிச்சயமாக கிழக்கை மீட்டு அதனை கட்டி எழுப்புவோம் - என்றார். (ஐ)

# 340 நாளாக நடைபயணம்; சந்தியாவும் பங்கேற்றார்!




மட்டக்களப்பு மாவட்ட மக்கள் ஒன்றிணைந்து சுழற்சி முறையில் முன்னெடுத்துள்ள, மக்களுக்கான நியாயம் தொடர் நடைப்பயணம் நேற்று 340ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

'அமைதிக்காக, நீதிக்காக நடக்கின்றோம்' எனும் தொனிப் பொருளில் நடைபவனி நடைபெற்றது.

ஜனநாயகத்துக்கான நியாய தொடர் நடை பயணமானது, கல்லடி பாலத்துக்கு அருகில் இருந்து மட்டக்களப்பு நகர் காந்தி பூங்கா வரை பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வாறு நடைபவனி நடைபெற்றது.

நடைபயணத்தில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலி கொடவின் மனைவி, சந்தியா எக்னெலிகொடவும் கலந்து கொண்டார். (ஐ)

# பொது கட்டமைப்பின் ஏற்பாட்டில் அன்னை பூபதி நினைவேந்தல்!




மட்டக்களப்பு, ஏப். 17

அன்னை பூபதியின் 35ஆவது நினைவு தினம் பொதுக் கட்டமைப்பின் கீழ் நடைபெறும் என ஏற்பாட்டுக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அன்னை பூபதியின் நினைவு தினம் அவர் உயிர்நீத்த ஏப்ரல் 19ஆம் திகதியான நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வானது கடந்த காலங்களில் ஒழுங்கில்லாமல் ஒவ்வொருவருக்கும் ஏற்ற வசதிக்கு ஏற்ற நேரத்திலே தியாகச்சுடர் ஏற்றப்பட்டு வழிபாடுகள் செய்யப்பட்டது. ஆனால், இம்முறை அதன்படி இல்லாமல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற பெரியவர்களை கொண்டு கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பின் தீர்மானங்களுக்கு அமைய நாளை மறுதினம் நினைவேந்தல் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 100 மாணவர்களுக்கு கொடுப்பனவுகள்!



கல்முனை, ஏப். 17

அம்பாறை கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட, தாய் தந்தையை இழந்த, விசேட தேவையுடைய தெரிவு செய்யப்பட்ட சுமார் நூறு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தினது பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும், 'அஸ்-ஸுஹறாவுடன் மீள் இணைவோம்' தொனிப் பொருளில், உயிரூட்டிய பாடசாலைக்கு உரமூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

கற்றல் உபகரணங்களுக்கான இரண்டு இலட்சம் ரூபாய் கொடுப்பனவுகள் பாடசாலையின் பழைய மாணவ செயலாளர் அஜ்வத்தினால் பாடசாலை அதிபர் மஜீதியாவிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

# ரயிலுடனான விபத்துகளில் மட்டக்களப்பில் மூவர் பலி!

மட்டக்களப்பு, ஏப். 17

மட்டக்களப்பில் கடந்த இரு வாரங்களில் மட்டும் ரயிலுடன் மோதுண்டு மூன்று பேர் உயிரிழந்தனர் என்று அறிய வருகின்றது.

மட்டக்களப்பு புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதியில் ரயிலுடன் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை மட்டக்களப்பு - கொழும்பு கடுகதி ரயிலுடன் மோதுண்டே இவர் உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

உயிரிழந்தவர், சத்துருகொண்டான் பாடசாலை வீதியை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான இராமசாமி ரமேஷ்காந் (44) என்பவர் என அடையாளம் காணப்பட்டார்.

முன்னதாக கடந்த 3 மற்றும் 10ஆம் திகதிகள் நடந்த ரயில் விபத்துகளிலும் இருவர் உயிரிழந்தனர். இதன்படி, இரு வாரங்களில் விபத்துகளால் மூவர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் இரு குழுக்கள் மோதல்

## 17 பேர் காயம்!

திருகோணமலை, ஏப். 17

திகோணமலையில் இரு குழுக்களிடையே இடம்பெற்ற கைகலப்பில் காயங்களுக்கு உள்ளான நிலையில் 17 பேர் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

தம்பலகாமம் - தெலுங்கு கிராமத்தை சேர்ந்தவர்களே இவ்வாறு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதலிலேயே இவர்கள் காயமடைந்தனர்.

தம்பலகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சூடானில் ஆட்சியை பிடிக்க மோதல் 56 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்!



கார்ட்டூம், ஏப். 17

**சூடானில் இராணுவத்துக்கும் துணை இராணுவத்துக்கும் இடையில் நடக்கும் அதிகாரப் போட்டிக்கான மோதல்களில் சிக்கி 56 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.**

தலைநகர் கார்ட்டூமில் ஜனாதிபதி மாளிகை, அரச தொலைக்காட்சி, இராணுவ தலைமையகம் என்பன துணை இராணுவத்தின் கை ஓங்கியிருக்கிறது. எனினும், இந்தப் பகுதிகளில் கடுமையான துப்பாக்கி சண்டைகள் நடைபெறுகின்றன.

தலைநகரில் நடக்கும் இந்த மோதல்களால் 17 பொதுமக்கள் உட்பட 25 பேர் உயிரிழந்தமையை மருத்துவர்கள் அமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

தவிர, இராணுவமும் துணை இராணுவப் படைகளும் கார்ட்டூம் விமான நிலையத்திலும் பிற முக்கிய தளங்களிலும் போரிட்டு வருகின்றன. நாடு முழுவதும் நடத்தப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது 56 பேர் கொல்லப்பட்டனர். சில பத்து இராணுவத்தினரும் துணை இராணுவத்தினரும் உயிரிழந்தனர். 595 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஐ. நாவின் உலக உணவு திட்டத்தின் பணியாளர்கள் மூவரும் இதில் கொல்லப்பட்டனர்.

சூடானில் எண்ணெய் வளம், தங்கமும் நிறைந்த நாடாகும். எனினும், பசி, தண்ணீர் இன்றி பெரும் பாதிப்புகளை அந்த நாடு எதிர்கொண்டு வருகின்றது. இந்த நாட்டை 1996 முதல் இராணுவ தளபதியாக இருந்த ஒமர் அல் பஷீர் அந்த நாட்டின் சர்வாதிகார தலைவராக ஆட்சி செய்தார்.

2019இல் நடத்தப்பட்ட போராட்டங்களை அடுத்து அவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். இதன் பின்னர் புதிய ஜனநாயக அரசாங்கத்தை அமைக்க திட்டமிடப்பட்டது. தற்போது, நாட்டை இராணுவ ஜெனரல்கள் இயக்கி வருகின்றனர். சூடான் ஆட்சிக் குழுவின் தலைவராக தளபதி ஜெனரல் அப்தெல் பத்தா அல் - புர்ஹான் உள்ளார். ஹெமெட்டி என்று அழைக்கப்படும் ஜெனரல் முகமது ஹம்தான் டகாலோ துணைத் தலைவராக உள்ளார்.

ஜனநாயக ஆட்சிக் கட்டமைப்பை ஏற்படுத்த துணை இராணுவக் குழு முயல்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் பிரதமரை குண்டுவீசி கொலை செய்வதற்கு முயற்சி!



ரோக்கியோ, ஏப். 17

பொதுக்கூட்ட மேடையில் பைப் வெடிகுண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டதில் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார். குண்டு வீசியவரை பொலிஸார் கைது செய்தனர்.

ஜப்பானின் வகயாமா மாகாணத்தில் உள்ள சைகாசாகி துறைமுகம் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த உள்ளாட்சி தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா பங்கேற்றார். கூட்டம் தொடங்குவதற்கு முன்பு, மக்கள் மத்தியில் இருந்த மர்ம நபர் ஒருவர், பிரதமர் கிஷிடா அமர்ந்திருந்த மேடையை நோக்கிபைப் வெடிகுண்டை வீசினார். அந்த குண்டு, மேடைக்கு அருகே விழுந்து வெடித்தது. இதில் பெரிய அளவில் புகைமூட்டம் ஏற்பட்டது. இதனால் பதற்றமடைந்த மக்கள் சிதறி ஓடினர்.

இதையடுத்து, பிரதமர் கிஷிடாவை பாதுகாப்பு படையினர் சூழ்ந்துகொண்டு, அவரை பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர். அதிர்ஷ்டவசமாக அவர் காயமின்றி உயிர் தப்பினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, பைப் வெடிகுண்டு வீசிவிட்டு தப்ப முயன்ற நபரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அவர் எதற்காக இந்தத் தாக்குதலை நடத்தினார் என்ற தகவல் தெரிவிக்கப்படவில்லை.

ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் ஜி-7 அமைப்பின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாடு அடுத்த மாதம் நடக்கவுள்ள நிலையில் பிரதமர் கிஷிடா மீது தாக்குதல் முயற்சி நடந்துள்ளது. முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே கடந்த 2022 ஜூலையில் பிரச்சாரக் கூட்டத்தில் பேசும் போது, இளைஞர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் உயிரிழந்தார். இந்நிலையில் பல அடுக்கு பாதுகாப்பை மீறி, ஜப்பான் பிரதமர் மீது பைப் வெடிகுண்டு வீசப்பட்டிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)



# முன்னாள் எம். பியும் சகோதரும் இந்தியாவில் சுட்டுக் கொலை!

புதுடில்லி, ஏப். 17

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் முன்னாள் எம். பி. மற்றும் ரௌடிகளான ஆதிக் அகமது மற்றும் அவரின் சகோதாரர் அஷ்ரப் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

உத்தரப் பிரதேச மாநிலம் பிரக்யாராஜ் பகுதியில் போலிஸ் காவலில் இருந்த முன்னாள் எம். பியும், முன்னாள் ரவுடியுமான ஆதிக் அஹமது அவரது சகோதரர் அஷ்ரப் ஆகிய இருவரையும் மருத்துவ பரிசோதனைக்கு பொலிஸார் அழைத்து சென்றனர்.

அப்போது செய்தியாளர்களுக்கு இருவரும் பேட்டியளித்த போது, மர்ம நபர்கள் இருவரையும் சுட்டுக்கொன்றனர். அவர்களை சுட்டுக் கொன்ற மூவரும் உடனடியாகவே சரணடைந்தனர்.

சம்பவம் குறித்து விசாரிக்க பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் முதலமைச்சர் யோதி ஆதித்ய நாத் ஆலோசனை நடத்தினார். துப்பாக்கிச்சூடு சம்பவம் குறித்து விசாரணை நடத்த மூன்று பேர் கொண்ட குழு அமைத்து உத்தரவிட்டுள்ளார். அத்துடன், உத்தர பிரதேசம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஆதிக் அகமதுவின் மகன் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அத்துடன் அவரின் இரு மகன்கள் சிறையில் இருக்கின்றனர். மனைவி தலைமறைவாக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ஜெருசலேமில் கடும் கட்டுப்பாடுகளுக்குள் ஓர்தோடொக்ஸ் ஈஸ்டர் கொண்டாட்டம்!

ஜெருசலேம், ஏப். 17

இஸ்ரேல் பொலிஸாரின் கடுமையான கட்டுப்பாடுகளை மீறி ஓர்தோடொக்ஸ் ஈஸ்டர் திருநாளை ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் கொண்டாடினார்கள்.

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேமில் உள்ள திருக் கல்லறை தேவாலயத்தில் (இயேசு சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் செய்யப்பட்டதாக இடத்தில் இந்த ஆலயம் அமைந்துள்ளதாக நம்பப்படுகின்றது.) ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள்கூடி புனித தீ திருவிழாவை கொண்டாடினர்.

இந்தத் திருவிழாவுக்கு பல கட்டுப்பாடுகளை இஸ்ரேல் விதித்திருந்தது. இதனால், பாதுகாப்பை காரணம் காட்டி தேவாலயத்தின் உள்ளே 1,800 பொலிஸாரும் வெளியே 1,200 பொலிஸாரும் நிலை நிறுத்தப்பட்டிருந்தனர். இதனால், தேவாலயத்தின் உள்ளே அதிகளவில் கிறிஸ்தவர்கள் கூடமுடியாமல் போனது. எனினும், வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் ஏராளமான கிறிஸ்தவர்கள் சனிக்கிழமை கூடியிருந்தனர்.

ஞாயிறு நள்ளிரவு இயேசுவின் உயிர்த்தெழுதலை குறிக்கும்முகமாக கல்லறையிலிருந்து ஒருவர் மெழுகுவர்த்தி தீயுடன் வெளிப்பட்டார். இதைத் தொடர்ந்து மெழுகுவர்த்தி தீ பரப்பப்பட்டது.

இந்த தேவாலயத்தில் முன்னைய ஆண்டுகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் திரண்டு ஓர்தோடொக்ஸ் ஈஸ்டரை கொண்டாடுவது வழமை. ஆனால், ஆனால், இரண்டாவது ஆண்டாக கடுமையான கட்டுப்பாடுகளால் இந்த திருவிழாவை கிறிஸ்தவர்கள் அதிகளவில் கொண்டாட முடியாமல் போயுள்ளதாகக் கூறப்படுகின்றது.

"உள்ளூர் கிறிஸ்தவ சமூகத்தை வெளியேற்றுவதற்கான நீண்டகால முயற்சிகளின் ஒரு பகுதியாகவே இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன", என்று தேவாலயத்தினர் தெரிவித்துள்ளனர்.

ஓர்தோடொக்ஸ் ஈஸ்டர் இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறந்து மூன்று நாட்களுக்கு பிறகு அவர் உயிர்த்தெழுந்ததை கொண்டாடுவதே ஈஸ்டர். இந்த நாளை மேற்கத்தேய கிறிஸ்தவர்கள் கொண்டாடும் ஈஸ்டர் நாளைவிட ஓர்தோடொக்ஸ் கிறிஸ்தவர்கள் ஈஸ்டரை பிந்தைய நாளில் கொண்டாடுகின்றனர்.



வசந்த காலத்தின் பௌர்ணமி மற்றும் பாஸ்காவுக்கு பின்னர் ஞாயிற்றுக்கிழமை (ஏப்ரல் 04 - மே 08இற்கு இடையில் ஓர்தோடொக்ஸ் ஈஸ்டர் கொண்டாடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)



# 5ஆவது போட்டியிலும் தோற்றது டில்லி அணி!

பெங்களூர், ஏப். 17

பெங்களூார் றோயல் சலஞ்சர்ஸிடம் 23 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது டில்லி கப்பிட்டல்ஸ் இது அந்த அணி தொடர்ச்சியாக சந்தித்துள்ள 5ஆவது தோல்வியாகும்.

பெங்களூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணியின் தலைவர் டேவிட் வோர்ணர் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணியானது நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 174 ஓட்டங்கள் குவித்தது.

தனது 47ஆவது அரைச்சதத்தை விளாசிய விராட் கோலி 34 பந்துகளில், ஒரு சிக்ஸர், 6 பௌண்ட்ரிகளுடன் 50 ஓட்டங்கள் விளாசினார். கிளன் மக்ஸ்வெல் 14 பந்துகளில், 3 சிக்ஸர்களுடன் 24 ஓட்டங்களும் அணித் தலைவர் டு பிளசிஸ் 22, மஹிபால் லாம்ரோர் 26, ஷாபாஷ் அகமது 20, அனுஜ் ராவத் 15, ஹர்ஷால் படேல் 6 ஓட்டங்கள் சேர்த்தனர். தினேஷ் கார்த்திக் தான் சந்தித்த முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார்.

டில்லி அணி சார்பில் மிட்செல் மார்ஷ், குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். பெங்களூர் அணியின் ஓட்ட குவிப்பை கட்டுப்படுத்தியதில் குல்தீப் யாதவ், அக்சர் பட்டேல், லலித் யாதவ் ஆகியோர் முக்கிய பங்குவகித்தனர். இவர்கள் நடு ஓவர்களில் சிறப்பாக பந்து வீசினர். கூட்டாக இவர்கள் 11 ஓவர்களை வீசி 77 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக்கெட்களை வீழ்த்தினர்.

176 ஓட்டங்கள் இலக்குடன் பட் செய்த டில்லி அணி தொடக்கத்திலேயே ஆட்டம் கண்டது. பிரித்வி ஷா ஓட்டம் ஏதும் எடுக்காமல் அனுஜ் ராவத்தின் அற்புதமான த்ரோவால் ரன் அவுட் ஆனார்.

மிட்செல் மார்ஷ் (0), வெய்ன் பர்னல் பந்தில் நடையை கட்டினார். யாஷ் துல் ஓர் ஓட்டத்தில் முகமது சிராஜ் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார்.

வோர்ணர் 19 ஓட்டங்களில் விஜய குமார் வைஷாக் பந்தில் கோலியிடம் பிடிகொடுத்தார். அபிஷேக் போரல் 5 ஓட்டங்களில் ஹர்ஷால் பட்டேல் பந்தில் ஆட்டமிழந்தார்.

53 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை பறிகொடுத்து சரிவை நோக்கி பயணித்தது டில்லி அணி.

எனினும் மணீஷ் பாண்டே, அக்சர் பட்டேல் ஜோடி போராடியது. அக்சர் பட்டேல் 14 பந்துகளில் 3 பௌண்ட்ரிகளுடன் 21 ஓட்டங்கள் சேர்த்து வைஷாக் பந்தில் வெளியேறினார்.

மணீஷ் பாண்டே 38 பந்துகளில், ஒரு சிக்ஸர், 5 பௌண்ட்ரிகளுடன் 50 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹசரங்கா பந்தில் எல். பி. டபிள்யூ. ஆனார்.

இவர்களை தொடர்ந்து அமன் ஹக்கிம் கான் 18, லலித் யாதவ் 4 ஓட்டங்களில் நடையை கட்டினர். இறுதிக்கட்டத்தில் அன்ரிச் நோர்ட்ஜே 23, குல்தீப் யாதவ் 7 ஓட்டங்கள் சேர்த்தனர். எனினும், இது வெற்றிக்கு போதுமானதாக இல்லை.

20 ஓவர்கள் முடிவில் டெல்லி அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 151 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது.

பெங்களூர் அணி தரப்பில் விஜயகுமார் வைஷாக் 3, மொகமது சிராஜ் 2 விக்கெட்களை வீழ்த்தினர். 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெங்களூர் அணிக்கு இது 2ஆவது வெற்றியாக அமைந்தது. ஆட்ட நாயகனாக விராட் கோலி தேர்வானார்.

4 ஆட்டங்களில் விளையாடி உள்ள பெங்களூர் 2 தோல்விகளுடன் 4 புள்ளிகள் பெற்று பட்டியலில் 7ஆவது இடத்தில் உள்ளது.

# அயர்லாந்துடனான டெஸ்ட் இலங்கை வலுவான நிலை!





காலி, ஏப். 17

திமுத் கருணாரத்ன, குசல் மெண்டிஸ் ஆகியோரின் அபார சதங்களால் அயர்லாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் நாள் ஆட்டம் முடிவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 386 ஓட்டங்களைப் பெற்று வலுவாக உள்ளதுஇலங்கை அணி.

இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடுவதற்காக அயர்லாந்து அணி இலங்கை வந்துள்ளது. முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று காலியில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி, களமிறங்கிய இலங்கை அணிக்கு நிசான் மதுஷ்க, அணித் தலைவர் திமுத் கருணாரத்ன தொடக்கம் கொடுத்தனர்.

மதுஷ்க 29 ஓட்டங்களுடன் நடையைக் கட்ட, களம் புகுந்தார் குசல் மெண்டிஸ். அவர் திமுத்துடன் இணைந்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 69 பந்துகளில் திமுத் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். அவரைத் தொடர்ந்து மெண்டிஸ் 81 பந்துகளில் அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

தொடர்ந்து இருவரும் ஆடிய நிலையில், திமுத் 7 பௌண்ட்ரிகளுடன் 139 பந்துகளில் 15ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார். தொடர்ந்து மெண்டிஸ் 142 பந்துகளில் சதத்தைப் பூர்த்தி செய்தார். இது அவரின் 8ஆவது டெஸ்ட் சதமாக அமைந்தது. இருவரும் சிறப்பாக ஆடிய நிலையில் குசல் மெண்டிஸ் 140 ஓட்டங்களை பெற்ற நிலையில் டொக்ரெல்லின் பந்தில் எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து வந்த அஞ்சலோ மத்தியூஸ் 3 பந்துகளே தாக்குப் பிடித்தார். அவர் ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். எனினும் மறுமுனையில் திமுத் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அடுத்து வந்த தினேஷ் சந்திமால் அவருக்கு துணையாக நின்றார்.

எனினும், 235 பந்துகளை சந்தித்து 15 பௌண்ட்ரிகளை அடித்து 179 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் திமுத் கருணாரத்னவும் ஆட்டமிழந்தார்.

நேற்று முதல் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது இலங்கை 4 விக்கெட்கள் இழப்புக்கு 386 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தினேஷ் சந்திமால் 18, பிரபாத் ஜெயசூர்யா 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

அயர்லாந்தின் பந்துவீச்சில் மார்க் அடைர், கம்பெர், பென் வைற், ஜோர்ஜ் டொக்ரெல் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இன்று போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டமாகும். (ஐ)

# பஞ்சாப் கிங்ஸிடம் வீழ்ந்தது லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் !

லக்னோ, ஏப். 17

16ஆவது ஐ. பி. எல். தொடரின் 21ஆவது போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியும் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணியும் மோதின. இதில் பஞ்சாப் கிங்ஸ் அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

160 ஓட்டங்கள் இலக்கை துரத்திய அந்த அணிக்கு ஷிகர் தவான் இல்லாததால் புதிய இணை தொடக்கம் கொடுத்தது. ஆனால் அது நிலைக்கவில்லை. அறிமுக வீரராக களமிறங்கிய அதர்வா தைடேவை லக்னோ அணியில் அறிமுகம் கண்ட யுத்வீர் சிங் ஓட்டம் எதுவும் இல்லாமலே ஆட்டமிழக்க செய்தார். அவரை மட்டுமல்ல மற்றைய தொடக்க வீரரான பிரப் சிம்ரன் சிங்கையும் 4 ஓட்டங்களில் நடையைக் கட்ட வைத்தார் யுத்வீர் சிங்.

யுத்வீர் சிங்கின் அபார பந்துவீச்சால் பஞ்சாப் கிங்ஸ் ஆட்டம் கண்டது. அந்த அணியை மீட்டெடுக்க முயற்சித்தனர் மத்தேயூ ஷார்ட் மற்றும் ஹர்பிரீத் சிங் பாட்டியா இருவரும். மத்தேயூ ஷார்ட் அதிரடியாக தொடங்கினாலும், அதே வேகத்தில் ஆட்டமிழப்புக்கும் ஆளானார். 34 ஓட்டங்கள் சேர்த்த திருப்தியோடு அவர் பெவிலியன் திரும்ப, ஹர்பிரீத் சிங் 22 ஓட்டங்களோடு தனது நிதான ஆட்டத்தை முடித்துக்கொண்டார்.

சாம் கரனை ரவி பிஷ்னோய் பார்த்துக்கொள்ள, பஞ்சாப் அணிக்கு நம்பிக்கை அளித்தார் சகலதுறை வீரர் சிகந்தர் ரசா. ஒருபுறம் விக்கெட் சரிவுகள் இருந்தாலும் திறம்பட விளையாடிய ரசா அரைச்சதம் கடந்த நிலையில் 57 ஓட்டங்களுக்கு விக்கெட்டை பறிகொடுத்தார். இறுதிக்கட்டத்தில் தமிழகத்தைச் சேர்ந்த ஷாருக் கான் 23 ஓட்டங்கள் எடுத்து பஞ்சாப் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.




3 பந்துகள் மீதமிருக்கையில் 8 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டிய பஞ்சாப் அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

லக்னோ தரப்பில் யுத்வீர் சிங், ரவி பிஷ்னோய், மார்க் வூவுட் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். நடப்பு தொடரில் பஞ்சாப் பெறும் 3ஆவது வெற்றி இதுவாகும்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் பந்துவீச்சை தெரிவு செய்தது. இதன்படி லக்னோ அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான கைல் மேயர்ஸ், கே. எல். ராகுல், அணிக்கு நல்ல தொடக்கத்தை அமைத்து கொடுத்தனர். கைல்ஸ் மேயர் 7ஆவது ஓவரில் 29 ஓட்டங்களில் அவுட்டானார். அடுத்து வந்த தீபக் ஹூடா 2 ஓட்டங்களில் கிளம்பினார்.

குர்ணல் பாண்ட்யா 18 ஓட்டங்களிலும், நிக்கோலஸ் பூரண் ஓட்டம் எடுக்காமலும் பெவிலியன் திரும்ப கே.எல்.ராகுல் மறுபுறம் நின்று அதிரடி காட்டி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து 56 பந்துகளில் 74 ஓட்டங்களை குவித்த கே.எல். ராகுலும் கிளம்பினார்.

கிருஷ்ணப்பா கௌதம், யுத்வீர் சிங் வரிசையாக விக்கெட்டாக நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர் முடிவில் லக்னோ அணி 8 விக்கெட்களை இழந்து 159 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது.

பஞ்சாப் அணி தரப்பில் சாம் கரன் அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளையும், ரபாடா 2 விக்கெட்டையும், அர்ஷ்தீப் சிங், சிக்கந்தர் ராசா, ஹர்ப்ரீத் பரார் ஆகியோர் தலா 1 விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)

# பெருந்தொகை போதைப்பொருளுடன் 6 சந்தேக நபர்கள் நடுக்கடலில் கைது!

கொழும்பு, ஏப். 17

கடற்படை, பொலிஸ் மற்றும் ஏனைய புலனாய்வுப் பிரிவினர் இணைந்து இலங்கைக்கு தெற்கே உள்ள கடற்பரப்பில் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது பெருமளவான போதைப் பொருட்களுடன் ஆறு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பல நாள் மீன்பிடிக் கப்பலொன்றில் போதைப்பொருளை எடுத்துச் சென்றபோது கைது செய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

போதைப் பொருளின் அளவு மற்றும் மதிப்பு இன்னும் மதிப்பிடப்படவில்லை. (ஐ)

# ரூ. 50 ஆயிரத்தை ஒரு குரங்குக்காக சீனா செலவிட தயாராகவுள்ளதாம்!

## அமைச்சர் மகிந்த அமரவீர



கொழும்பு, ஏப். 17

இலங்கையிலுள்ள குரங்கு ஒன்றைப் பிடிப்பதற்காக மாத்திரம் சுமார், 5 ஆயிரம் ரூபாய் வரையில் செலவிடுவதற்கு சீனா தயாராகவுள்ளதாக விவசாயத் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கையிலுள்ள குரங்கு ஒன்றுக்காக சுமார் 30 ஆயிரம் ரூபாய் தொடக்கம் 50 ஆயிரம் ரூபாய் வரையில் சீன அரசாங்கம் செலவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் மகிந்த அமரவீர குறிப்பிட்டார்.

இலங்கை குரங்குகளை சீனாவுக்கு கொண்டு சென்று இறைச்சிக்காக பயன்படுத்தபோவதாக வெளியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை. சீனாவிலுள்ள மிருககாட்சிச்சாலைகளுக்கு கொண்டு செல்லும் வகையிலேயே சீனாவால் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக தெரிவித்த அமைச்சர், இலங்கையிலுள்ள குரங்கு ஒன்றை பிடிப்பதற்கும், அதனை சீனாவுக்கு கொண்டு செல்வது வரையான அனைத்து செலவினங்களையும் சீனாவே ஏற்றுக் கொண்டுள்ளதாக கூறினார்.

அத்துடன், குரங்குகளை பிடித்து, அதனை தனிமைப்படுத்தி, நோய்கள் ஏதேனும் காணப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராய்ந்து, கூடுகளில் அடைத்து, சீனாவுக்கு கொண்டு செல்வதற்கான முழு செலவினத்தையும் சீனாவே ஏற்றுக்கொண்டுள்ளதாக விளக்கம் அளித்துள்ளார்.

இலங்கையிலிருந்து குரங்குகளை 50 ஆயிரம் ரூபாய் செலவளித்து சீனாவிற்கு கொண்டு சென்று, அந்த குரங்கை இறைச்சிக்காக பயன்படுத்துவார்களாயின் 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் இலாபம் வைத்து ஒரு இலட்சம் ரூபாவுக்கே விற்க வேண்டிய நிலை ஏற்படும் என குறிப்பிட்ட அமைச்சர் ஒரு இலட்சம் ரூபாயை செலவிட்டு, குரங்குகளை சீனர்கள் உட்கொள்ள மாட்டார்கள் என்றும் கூறினார். (அ)

# சீ ஷெல்ஸ்-இலங்கை இடையே நேரடியான விமான சேவைகள்!

கொழும்பு, ஏப். 17

சீ ஷெல்ஸ் மற்றும் இலங்கைக்கு இடையில் நேரடி விமான சேவைகளை ஆரம்பிக்க எயார் சீ ஷெல்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதி முதல் விமான சேவைகள் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சீ ஷெல்ஸ் மற்றும் கொழும்புக்கு இடையில் வாரத்துக்கு இரண்டு முறை நேரடி விமான சேவைகளை மேற்கொள்ள எயார் சீ ஷெல்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

சிறந்த சுற்றுலா, மருத்துவம் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை கொண்ட இடமாக இலங்கை இருக்கும் என எயார் சீ ஷெல்ஸ் தெரிவித்துள்ளது. (அ)

# ஒரே நாளில் மட்டும் ரூ. 3.5 கோடி வருமானம்!

கொழும்பு, ஏப். 17

நாட்டிலுள்ள நெடுஞ்சாலைகளின் 15 ஆம் திகதி சனிக்கிழமை வருமானம் மூன்றரை கோடி ரூபாய் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

15 ஆம் திகதி ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 760 வாகனங்கள் நெடுஞ்சாலைகளை பயன்படுத்தின என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# இசை நிகழ்ச்சியில் கத்திகுத்து ஆறு இளைஞர்களுக்கு காயம்!

கொழும்பு, ஏப். 17

கதிர்காமத்தில் நடந்த இசை நிகழ்ச்சியின் போது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் 6 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் 6 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புத்தாண்டு விழா ஒன்றின் இறுதியில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது இரு தரப்பினரிடையே மோதல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# இலங்கையில் சீன ராடர் தளம்!

## இந்தியா கரிசனை

சென்னை, ஏப். 17

சீனாவின் உதவியுடன் இலங்கையில் ராடார் தளத்தை அமைப்பதற்கான முயற்சிகள் குறித்தும் மியன்மாரில் இராணுவதளமொன்றை அமைப்பதற்கு சீனா உதவுவது குறித்தும் இந்தியா கரிசனை கொண்டுள்ளது என இந்து நாளிதழ் தெரிவித்துள்ளது.

மியன்மாரின் கொக்கோ தீவுகளில் இராணுவதளமொன்று உருவாக்கப்படுவதும் இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள தொலைதூர செயற்கை கோள் தரவுகளை பெறும் நிலையமும் பிராந்தியத்தில் சீனாவின் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்த கரிசனையை இந்தியாவுக்குக்கு ஏற்படுத்தியுள்ளன. இராணுவதளமும் தொலைதூர செய்மதி நிலையமும் சீனாவின் உதவியுடனேயே நிர்மாணிக்கப்படுவதாக அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் உள்ள கொக்கோ தீவுகளில் இராணுவதளமொன்று உருவாக்கப்படுவதை சமீபத்தைய செய்மதி படங்கள் காண்பித்துள்ளன.

அத்துடன், இலங்கையில் முன்மொழியப்பட்டுள்ள தொலைதூர செயற்கை கோள் தரவுகளை பெறும் நிலையமொன்றை உருவாக்கும் யோசனையை முன்வைத்துள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவின் அக்கடமி ஒவ் சயன்ஸின் கீழ் உள்ள ஏரோஸ் பேஸ் இன்பேமேர்சன் ரிசேர்ச் இன்ஸ்டியுட்டிற்கும் ருகுணை பல்கலைகழகத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பின் கீழ் இந்த செயற்கை கோள் தளம் உருவாக்கப்படுகின்றது. இதனை பயன்படுத்தி இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புபட்ட வளங்களை வேவுபார்க்கலாம் பிராந்தியத்தில் தகவல்களை இடைமறித்து கேட்கலாம் என பாதுகாப்பு வட்டாரங்களை சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் இந்து நாளிதழ் தெரிவித்துள்ளது. (ஐ)

# பகையை மறந்து பதவி ஏற்குமாறு பீரிஸுக்கு மீண்டும் அழைப்பு!

கொழும்பு, ஏப். 17

பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியை பொறுப்பேற்குமாறு பாராளுமன்ற உறுப்பினர், பேராசிரியர் ஜீ. எல். பீரிஸுக்கு பொதுஜன பெரமுன அழைப்பு விடுத்துள்ளது.

பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறிடலஸ் தரப்புடன் இணைந்து பாராளுமன்றத்தில் செயற்பட்டு வருகின்ற நிலையில் இவ்வாறு மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

குறிப்பாக சுதந்திர மக்கள் சபை எனும் கட்சியை உருவாக்கி தற்போது அதில் பீரிஸ் செயற்பட்டுவருகின்றனர்.

இதனால் பொதுஜன பெரமுன கட்சயின் தவிசாளர் பதவியில் இருந்து பீரிஸ் நீக்கப்பட்டுவிட்டதாக கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே பீரிஸுக்கு, பொதுஜன பெரமுன கட்சி மீண்டும் அழைப்பு விடுத்துள்ளதாகவும் இது தொடர்பில் அவர் இன்னும் பதிலளிக்கவில்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# லொறி - டிராக்டர் விபத்து; இரு பெண்கள் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 17

பொலநறுவையில் இடம்பெற்ற விபத்தில் இரு பெண்கள் உயிரிழந்தனர். அத்துடன், இரண்டு சிறுவர்கள் உட்பட எட்டு பேர் காயமடைந்துள்ளனர்.

பொலநறுவை - ஒனேகம வீதியில் வலேகடே என்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியும் உழவு இயந்திரமும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது. இதில், உழவு இயந்திரத்தில் பயணித்த 10 பேரிலேயே இருவர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலநறுவை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# இசை நிகழ்ச்சிக்கு சென்றவர் துப்பாக்கி சூட்டில் மரணம்!

கொழும்பு, ஏப். 17

இசை நிகழ்ச்சியை பார்வையிட சென்றவர் துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்டார்.

காலி - தடல்லை - இடம்பெற்ற இந்த இசை நிகழ்ச்சியில் அதே இடத்தை சேர்ந்த 'கசிப்பு ரொஷான்' எனப்படும் 37 வயதுடைய நோரகல் ரொஷான் என்பவரே இவ்வாறு கொலையானார்.

காலி, தடல்ல பிரதேசத்தில் புத்தாண்டு விழாவும், அதைத் தொடர்ந்து இரவு இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. குறித்த நபர் இரவு 10 மணியளவில் அந்த நிகழ்ச்சியை பார்க்க வந்து கொண்டிருந்தபோது, அவருக்குப் பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமடைந்து காலி கராப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## நாம் அரசுடன்...

கள் முற்றாக நிராகரிப்பதுடன், அந்தத் தகவலையும் கண்டிக்கிறோம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த அறிக்கையில்,

இதுவரை இருந்து வந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் நீட்சியாகவே பதவியில் இருக்கும் அரசாங்கம் காணப்படுகிறது. முன்னைய அரசாங்கம் இந்த நாட்டைத் தள்ளிய பாதாளத்தை விட மோசமான பாதாளத்துக்கு எமது நாட்டைத் தள்ளுவதாகவும் உள்ளது. விரைவில் இந்த அரசாங்கத்தின் அப்பட்டமானம் நாடகங்கள் தோற்றுப் போகும் எனவும் ஆரம்பத்திலேயே எச்சரித்தோம். அது சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப்படுத்தப்படும்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் நிழல் அரசாங்கமாக மாறிவரும் அரசாங்கம், அதன் தோல்வியுற்ற அதிகார நிகழ்ச்சி நிரலை செயல்படுத்தும் முயற்சியில் ஆதாரமற்ற தவறான தகவல்களை பரப்பும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது. கூட்டு முதலாளித்துவ கும்பலுக்கும் பிற்போக்கு சக்திகளுக்கும் ஒரே சவாலாக ஐக்கிய மக்கள் சக்தி மாறியுள்ளது. மேலும் அந்த கும்பல் ஐக்கிய மக்கள் சக்தியை சேதப்படுத்துவதற்கும், களங்கப்படுத்துவதற்கும் எந்த விலையையும் கொடுக்க யோசிக்காது.

ஐக்கிய மக்கள் சக்தியின் அணி அரசாங்கத்தில் இணையப் போகிறது என்ற போலிச் செய்தியில் தொடங்கி தொடர்ந்து பொய்ச் செய்திகளை வெளியிட்ட அந்தக் கும்பல், இப்போது, ஐக்கிய மக்கள் சக்தி பிளவுபடப் போவதாகப் பொய்ச் செய்திகளைப் பரப்பும் சமீபத்திய உத்தியை கையாண்டுள்ளனர். பிரதமர் மற்றும் பிற அமைச்சர் பதவிகளுக்காக அரசாங்கத்தில் சேர்வதாக வதந்திகள் பரவுகின்றன.

அந்த கும்பலுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையே உள்ள முக்கியமான பிளவுக்கோடு என்னவென்றால், அவர்கள் பேரங்கள் மற்றும் சிதைவுகளின் அரசியலை நம்புகிறார்கள். அதே நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாம் உண்மையை நம்புகிறோம். இந்த துரதிர்ஷ்டமான சூழ்நிலையில் இருந்து நம் நாட்டைக் காப்பாற்ற ஒரு தேர்தலைத் தவிர வேறு எந்த மாற்று வழியும் இல்லை என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இந்த நாட்டில் இயங்கி வரும் நாகரிக ஊடகங்களில் இருந்து பாடம் கற்கவும், தொடர் முயற்சிகளை மேற்கொண்டு, ஊடகங்களை துஷ்பிரயோகம் செய்யும் அளவுக்கு ஊடகங்களை வழிநடத்தும் சில ஊடக நிறுவனங்களுக்கு அவ்வாறு செய்ய வேண்டாம் என வலியுறுத்த வேண்டும்.

சிறிய நிதி ஆதாயங்களுக்காக எந்தவொரு கட்டுக்கதையையும் சமூகமயமாக்குவதற்குப் பதிலாக, புத்திசாலித்தனமாகவும் நெறிமுறையுடனும் ஊடகங்களைப் பயன்படுத்துமாறு அவர்களுக்கு நாங்கள் பரிந்துரைக்க விரும்புகிறோம். ஆனால், அவர்களின் எஜமானரின் கருத்தை பிரபலப்படுத்த அவர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் அனுதாபம் காட்டுகிறோம். ஒன்றை வலியுறுத்த விரும்புகிறோம். அதாவது, மக்கள் உண்மையை மாற்ற முடியாது என்றாலும் உண்மை மக்களை மாற்றும் - என்றார். (ஐ)

## யாழிலிருந்து...

மானது. அன்னை பூபதியின் உருவப் படம் தாங்கிய ஊர்திப்பவனி நல்லூரில் உள்ள தியாகதீபம் நினைவிடத்தில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் ஆரம்பமானது.

ஊர்தி பேரணி நல்லூரில் அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட இடத்துக்கும் நேற்று அஞ்சலி செலுத்த வசதியாக வந்தது. இதன்போது அங்கிருந்தவர்கள் அன்னை பூபதிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தமிழர் தாயகம் முழுவதும் பயணிக்கும் இந்த ஊர்தி அன்னை பூபதியின் உயிர்த் தியாகம் செய்த நாளை மறுதினம் மட்டக்களப்பை சென்றடையும். அங்கு அவரின் நினைவிடத்தில் இறுதி அஞ்சலி செலுத்தப்படும். (ஐ)

## 5 அம்ச...

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு என்ற அமைப்பின் அழைப்பின் பேரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 4 மணி வரை நல்லை ஆதீன முன்றலில் நடைபெற்றது.

இதில், அழிக்கப்பட்ட வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவில் சிவலிங்கம், தெய்வ சிலைகள் உடனடியாக மீள அமைக்கப்படவேண்டும். நீதியான விசாரணை துரிதப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும், குருந்தூர் மலை, கன்னியா வெந்நீரூற்று ஆதி சிவன் வழிபாட்டு உரிமைகள் உடனடியாக மீள வழங்கப்படுவதுடன் புதிய பௌத்த கட்டுமானம் மற்றும் பௌத்த தொல்லியல் புதிய அரசிதழ் இரத்து நடைமுறையில் செயல்படுத்தப்பட வேண்டும்.

இன மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் தமிழர் தாயகத்தின் தொன்மங்களை, மரபுரிமைகளை மாற்றியமைக்கும் தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயல்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும், மட்டக்களப்பு மயிலத்தனை மடு மேய்ச்சல் தரையில் பெரும்பான்மை இன மக்களின் ஆக்கிரமிப்புக்கள் சகலதும் நிறுத்தப்பட்டு தமிழ் பண்ணையாளர்களின் மரபுரிமையான மேய்ச்சலுக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்த வேண்டும்.

போருக்கு பிந்திய இன, மதப்பரம்பலை மாற்றி அமைக்கும் திட்டமிட்ட பெரும் குடியேற்றம் உள்ளிட்ட செயல்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் - ஆகிய முதன்மை கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

நேற்றைய இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், க. வி. விக்னேஸ்வரன், சி. சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சுரேஷ் பிறேமச்சந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்,தென்கயிலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளார், சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஜெபரட்ணம், அகில இலங்கை சைவ மகா சபை, தமிழ்ச் சைவப் பேரவை மற்றும் சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிறிஸ்தவ மதத் தலைவர்கள், அரிசியல் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

## மத ரீதியாக...

உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அன்னை பூபதியின் 35ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்புக்கு ஊர்தி பேரணி ஆரம்பமானது. இதன் போது செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டில் தற்போது பௌத்தமயமாக்கலும் சிங்கள மயமாக்கலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமானால் தமிழ் மக்களின் தேசம் அங்கீகரிக்கப்படவேண்டும். அத்துடன், ஒற்றையாட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும். தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையை முழுமையாக அனுபவிக்கக்கூடிய வகையிலான சமஷ்டி அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் - என்றும் அவர் சொன்னார். (ஐ)

## சந்நிதி...

இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று செல்வச்சந்நிதி நிர்வாகம் விசனம் தெரிவித்துள்ளது.

அண்மைய நாள்களாக மத மாற்ற அமைப்புகள் தொடர்பில் பல்வேறு குழப்பமான சம்பவங்கள் இடம்பெறும் சூழலில் சம்பந்தப்பட்ட தரப்புகள் இந்த விடயத்தில் உரிய கரிசனை கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றும் ஆலய நிர்வாகம் கோரியுள்ளது. (ஐ)

## சிலை...

பலிக்கும் விதமாக தீவகத்தின் நுழைவாயிலான பண்ணை சுற்றுவட்டத்தில் புதுவருட தினத்தன்று அம்மன் சிலை வைக்கப்பட்டது.

இந்த வழக்கு நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த நிலையில் அம்மன் சிலை தொடர்பில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லை ஆதீன குருமுதல்வர் தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் அனைத்து இந்து சமய அமைப்புகள், ஆலய அறங்காவலர்கள் மற்றும் சைவ அபிமானிகள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## டெங்கு...

டெங்கு தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இதனால், அவர் கடந்த 7ஆம் திகதி யாழ்ப் பாணம் போதனா மருத் துவமனைக்கு மாற்றப் பட்டார்.

எனினும், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பைச் சேர்ந்த கே.எம் .கே. செவ்வந்தி என்ற பெண் சிப்பாயே உயிரிழந்தவராவார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ஐ)

## வழக்கை...

பற்றி எரிந்தமையால் இலங்கை கடல்பரப்புக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு கப்பலுக்கு சொந்தமான நிறுவனத்திடமிருந்து நட்டஈடு பெறுவது தொடர்பில் சட்டமா அதிபரால் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும்.

ஆனால், சிங்கப்பூர் நிறுவனத்துக்கும் இலங்கை தரப்புக்கும் மத்தியில் இந்த நடவடிக்கை சில காரணங்களால் தாமதிக்கப்பட்டிருந்தது. அதனால் இந்த விடயத்தில் நான் தலையிட்டேன். வழக்கு நடவடிக்கைகளுக்கான அறிக்கைகளை வழங்காமல் இருந்தன. கடந்த வருடம் செப்ரெம்பர் 23ஆம் திகதி இறுதித் திகதி என கூறி, அறிக்கைகளை வழங்குமாறு கூறினேன். ஆனால், வழங்கவில்லை.

என்றாலும் குறித்த அறிக்கைகள் இந்த வருடம் ஜனவரி மாதம் வழங்கப்பட்டன. அதனை உடனடியாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு வழங்கினோம். இருந்தபோதும் இந்த நடவடிக்கையை தாமதப்படுத்த அல்லது வழக்கு தாக்கல் செய்யாமல் இருக்க காப்புறுதி நிறுவனம் ஒரு தரப்புக்கு இலஞ்சம் வழங்கி இருப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது.

அந்த தகவல் உண்மையா பொய்யா என எனக்கு தெரியாது. ஒருவரின் லண்டன் கணக்கில் 25 கோடி டொலர் வைப்பிலிடப்பட்டுள்ளதாக எனக்கு ஒருசில தினங்களுக்கு முன்னதாக தகவல் கிடைத்தது. இந்தத் தகவல் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வு பணிப்பாளருக்கு கோரிக்கை விடுத்திருக்கிறேன்.

அத்துடன், அவ்வாறு யாருடையதாவது கணக்குக்கு பணம் சென்றுள்ளதா? யார் வைப்பிட்டுள்ளார் என்பதை விசாரணை செய்யுமாறும் தெரிவித்துள்ளேன். அதன் பின்னரான விடயங்களை நாங்கள் கண்டுபிடிப்போம் - என்றார்.

எக்ஸ்பிரஸ பேர்ள் கப்பல் தீப்பற்றி எரிந்தமையால் இலங்கை கடற்பரப்பு சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட சேதத்துக்காக 6200 கோடி அமெரிக்க டொலர் இழப்பீடு வழங்கவேண்டும் என சமுத்திர பாதுகாப்பு அதிகாரசபை நிபுணர் குழுவை நியமித்து தயாரித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)

## எக்னலியகொட...

வர்கள் அல்ல. இவர்கள் இணைந்து ஒரு குழுவாகவே செயல்படுகின்றனர்.

மகிந்த ராஜபக்ச அவருடைய அரசியலை நிலை நிறுத்துவதற்காக இந்த மண்ணில் கருணாவையும் பிள்ளையானையும் பயன்படுத்தியுள்ளார். மட்டக்களப்பில் இடம்பெற்ற அனைத்து விதமான கொலை, கொள்ளை கடத்தல்களுக்கு இவர்களே மூல காரணமாக இருந்தனர் என்றும் அவர் கூறினார்.

மேலும், தனது கணவர் கடத்தப்பட்டதில் இவர்களுடைய தொடர்பு இருக்கிறது. இன்று தன்னைப் போன்று பல காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்கள் தொடர்ந்து இந்த போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனது கணவரின் சுவாசக் காற்று இறுதியாக பிரிந்தது மட்டக்களப்பு மண்ணில் என்று தான் அறிந்துள்ளார் என்றும் சந்தியா எக்னலியகொட மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மகிந்த ராஜபக்சவை பாதுகாப்பதற்கே புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வந்துள்ளதாகவும் சந்தியா கூறியுள்ளார். (ஐ)

## எதிர்க்கட்சி...

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், இனவாத நடவடிக்கைகள் என்பவற்றின் பின்னணி தொடர்பிலும் தகவல்கள் வெளியிடப்படும். நாம் 21ஆம் திகதி கொழும்பை ஆக்கிரமிப்போம். எதிர்க்கட்சி எப்போதும் பலமாக இருக்கிறது என்றும் அவர் கூறினார். (ஐ)

## அம்மன்...

பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் ஒப்பமிடப்பட்ட அந்த அறிவித்தல் உருவச்சிலைக்கு அருகாமையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் அங்கு காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் நீதிமன்ற வழக்கு இலக்கம் குறிப்பிட்டு பொலிஸாரின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

“2023.04.15ஆம் திகதி யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் பரிசோதகரினால் யாழ். பண்ணை சுற்றுவட்டப் பகுதியில் ஊர்காவற்றுறை வீதியில் எவ்வித அனுமதியுமின்றி சட்டத்துக்கு புறம்பாக இனந்தெரியாத நபர்கள் மூலம் பார்வதி அம்மன் சிலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக எதிர்காலத்தில் போக்குவரத்துக்கு இடையூறு மற்றும் இன, மத, சமூக உடன்பாடுகளுக்கு விளைவுகள் ஏற்படும் நிலை உருவாகி சமாதான சீர்குலைவு ஏற்பட வாய்ப்புள்ளது என அறிக்கை செய்து அந்தச் சிலையை அகற்றுவதற்கு வீதி அபிவிருத்தி சபையின் அதிகாரிக்கு கட்டளையொன்றை பிறப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே, இந்தச் சிலையை உரிய அனுமதிபெற்று அமைத்து இருப்பின் அந்த அனுமதியுடன் அல்லது உருவாக்கிய நபர்கள் யாரேனும் இருந்தால் அல்லது இந்தச் சிலையை உரிமை கோரும் யாராவது இருந்தால் 18.04.2023ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு சமுகமளித்து உரிமை கோருமாறும் மன்று கட்டளையிடுவதுடன் இதன் உரிமை கோருவதற்கு தவறும் பட்சத்தில் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் இந்தச் சிலை அகற்றப்படும் என இத்தால் அறியத் தருகின்றேன்”, என்றுள்ளது.

நயினாதீவு நாகபூசனி அம்மனை பிரதிபலிக்கும் அடையாளமாக யாழ்ப்பாணம் பண்ணை சுற்றுவட்டத்தில் அமைந்த சிலைக்கு தமிழ் புதுவருடப் பிறப்பு தினத்தன்று பால் அபிசேகம் உருத்திர சேனை அமைப்பால் செய்யப்பட்டது.

இந்த நிலையில் உருத்திர சேனா அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு 3 மணிநேரம் தீவிர விசாரணக்கு உள்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழ் மக்கள் முன்னாலுள்ள ஒரே தெரிவு 13ஆம் திருத்தமே!

## திருமலை கருத்தரங்கில் வலியுறுத்து

திருகோணமலை, ஏப். 17

**இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான 13ஆவது திருத்தச்சட்டத்தின் கீழுள்ள மாகாண சபை முறைமை ஒன்றுதான் தமிழ் மக்களுக்கு ஒரேயொரு வாய்ப்பாகும். இதனை தாண்டிச் செல்லப்போவதாகக் கூறினாலும் அதற்கு சாதகமாக எந்தவொரு வாய்ப்பும் இல்லை. இதனை தமிழ் அரசியல் தலைமைகளும் புரிந்துகொள்ள வேண்டும் - மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்று திருகோணமலை செயலரங்கத்தின் (அக்ட்) ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற கருத்தரக்கில் வலிறுத்தப்பட்டுள்ளது.**

13ஆவது திருத்தச் சட்டத்தை விளங்கிக்கொள்வோம் என்னும் தலைப்பில், அரசியல் ஆய்வாளர் யதீந்திராவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரங்கில், இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரான அண்ணாமலை வரதராஜப் பெருமாளின் செயலாளராக இருந்தவரான கலாநிதி விக்னேஸ்வரன் உரையாற்றியிருந்தார்.

இலங்கையின் பௌத்த கட்டமைப்பு மிகவும் பலமானது. அதனை தமிழர்களால் தனித்து எதிர்கொள்ள முடியாது. இந்த பின்புலத்தில் நோக்கினால் இந்தியாவின் ஆதரவை பெற்றிருக்கும் மாகாண சபை முறைமையை



தமிழர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அது ஒன்றுதான் இன்றுள்ள நிலையில் எங்களுக்கு இருக்கும் வாய்ப்பாகும் என்று குறிப்பிட்ட விக்கினேஸ்வரன், 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள சாதகமான பல அம்சங்களை தெளிவுபடுத்தியிருந்தார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஆர்வமில்லை. அதே வேளை அதனை பயனுடையதாக்க வேண்டும் என்பதில் தமிழ் தலைமைகளும் ஒரு கொள்கையுடன் செயலாற்றவில்லை. இதன் காரணமாகவே இந்த விடயம் தொடர்ந்தும் பேசு பொருளாக இருக்கின்றது. எனினும், தற்போது இதனை அமுல்படுத்துவதற்கான சாதகமான சூழல் காணப்படுகின்றது. இந்தியாவின் ஆதரவு முழுமையாக இருக்கின்றது. இந்த வாய்ப்பையும் நாம் தவற விடுவோமாயின் அதன் பின்னர் தமிழ் மக்களுக்கு எதுவும் இருக்கப் போவதில்லை - என்றும் தெரிவித்தார். (ஐ)



## பிள்ளையானின் வாகன அணியில் சிக்கிக் குடும்பஸ்தர் படுகாயம்!

கல்முனை, ஏப். 17

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் வாகனத் தொடரணியில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அம்பாறை - கல்முனை உள்ளக வீதியில் சனிகிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரு உள்ளக வீதிகளை இணைக்கின்ற நாற்சந்தியில் எதிரும் புதிருமாக வந்த பிள்ளையானின் வாகனத் தொடரணியின் கெப் ரக வாகனமும் மறுமுனையில் வந்த மோட்டார் சைக்கிளும் மோதி இவ்விபத்து இடம்பெற்றது.

இதில், மோட்டார் சைக்கிளில் வந்த 65 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக கல்முனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கல்முனை தலைமையக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு விபத்துக்கு உள்ளான வாகனங்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். (ஐ-01)

## காணாமல்போன குழந்தை சடலமாக நேற்று மீட்கப்பட்டது!

கொழும்பு, ஏப். 17

காணாமல் போனதாக தேடப்பட்டு வந்த இரண்டரை வயது குழந்தை நீரோடையில் இருந்து சடலமாக நேற்று மீட்கப்பட்டது.

காலி - நெலுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெலுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை குழந்தை காணாமல் போயிருந்தது.

அளுத்கம, தர்கா நகரைச் சேர்ந்த குழந்தை தனது தந்தையுடன் தனது பாட்டியின் வீட்டுக்கு சென்றிருந்த போதே காணாமல் போனது.

குழந்தை காணாமல் போயுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டதையடுத்து பொலிஸாரும் பிரதேசவாசிகளும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இருப்பினும், தேடுதலில் குழந்தை கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்நிலையில், பாட்டியின் வீட்டின் அருகே உள்ள நீரோடையில் குழந்தையின் சடலம் நேற்று மீட் கப்பட்டது. (ஐ)

## கை, கால்களற்ற நிலையில் வாவியிலிருந்து சடலம் மீட்பு

மட்டக்களப்பு, ஏப். 17

ஏறாவூர் - மைலம்பாவெளி வாவியில் காணாமல் போன மீனவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

சம்பவ இடத்திலிருந்து தமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், வாவிக்குச் சென்ற பொலிஸார், மீனவர்களின் உதவியோடு வாவியில் மிதந்துகொண்டிருந்த சடலத்தை மீட்டனர்.

இதன்போது, கைகள் மற்றும் கால்களின்றி உருக்குலைந்து பொருமிய நிலையில் சடலம் காணப்பட்டது.

வாவியில் உள்ள முதலை கடித்ததனால் தான் சடலம் கைகள், கால்களின்றி உருக்குலைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈச்சந்தீவு நாவற்காட்டைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய அமரசிங்கம் ஜெயச்சந்திரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டது. சடலத்தை அவரின் குடும்பத்தினர் அடையாளம் காட்டினர்.

இது குறித்து வவுணதீவு - ஏறாவூர் பொலிஸார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## முதல் சூரிய கிரகணம் எதிர்வரும் 20ஆம் திகதி!

கொழும்பு, ஏப். 17

2023ஆம் ஆண்டின் முதல் சூரிய கிரகணம் எதிர்வரும் 20ஆம் திகதி காலை 7.04 முதல் மதியம் 12.29 மணி வரை ஏற்படவுள்ளது.

முற்பகல் 9.46 மணிகக்கு சூரிய கிரகணத்தின் உச்ச நிலையை அடையவுள்ளது. தென்கிழக்கு ஆசியா, அவுஸ்திரேலியா, பசுபிக் பெருங்கடல் பகுதி, இந்திய பெருங்கடல் பகுதி, அந்தாட்டிக்கா ஆகிய பகுதிகளில் பகுதி கிரகணம் தென்படவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதியில் முழு சூரிய கிரகணத்தை அவதானிக்க முடியும். எவ்வாறாயினும், இலங்கை, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளுக்கு தென்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வயல் காவலுக்கு சென்ற இளைஞர் சடலமாக மீட்பு

வவுனியா, ஏப். 17

வயல் காவலுக்கு சென்ற இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா - புளியங்குளத்தைச் சேர்ந்த 20 வயதுடைய ஜெகநாதன் கேஜிதன் என்பவராவார்.

இவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு புதூர் பகுதியிலுள்ள தனது வயலுக்கு காவல் பணிக்காக சென்றுள்ளார்.

நேற்று காலை அவர் வீடு திரும்பவில்லை. இதனால், அவரின் வீட்டார் அவரைத் தேடிச் சென்றபோது இளைஞன் வயல் பகுதியில் உயிரிழந்து கிடந்தார்.

சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## சீனாவுக்கு குரங்குகள்; முடிவு இல்லை!

கொழும்பு, ஏப். 17

சீனாவுக்கு ஒரு இலட்சம் குரங்குகளை வழங்குவது தொடர்பில் உறுதியான இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை. மேற்பார்வை குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய சிறந்த தீர்மானம் எடுக்கப்படும் என்று விவசாயத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

சீனாவில் உள்ள மிருககாட்சிசாலைக்கு ஒரு இலட்சம் குரங்குகளை வழங்குவமாறு சீன பிரதிநிதிகள் குழு கோரிக்கை விடுத்துள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் அண்மையில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இளம் குடும்பஸ்தர் விபத்தில் மரணம்!

வவுனியா, ஏப். 17

முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த பட்டா ரக வாகனம் மோதியதில் இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார். அவரின் மனைவி படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா - நயினாமடுவில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றது. இதில், இராமலிங்கம் அனுசன் (வயது 23) என்பவரே உயிரிழந்தார்.

விபத்துத் தொடர்பில் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஓட்டோ - மோ. சைக்கிள் விபத்து; ஐந்து பேர் மருத்துவமனையில்!

கொழும்பு, ஏப். 17

முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் ஐவர் காயமடைந்து களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று களுத்துறை - பண்டாரகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்களில் மூன்று பெண்கள் உள்ளடங்குர்.

முச்சக்கரவண்டி பண்டாரகமவிலிருந்து கெஸ்பேவை நோக்கி பயணித்தபோது எதிர்த்திசையிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் வீதியை கடக்க, முச்சக்கரவண்டி சாரதி அதனை தவிர்க்க வலப்புறம் திருப்பி மோட்டார் சைக்கிளின் முன்பக்கத்தில் மோதியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் காயமடைந்த ஐவரையும் உடனடியாக பிரதேசவாசிகள் மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். (ஐ)

## 34 ரயில் சேவைகள் நேற்று இரத்தாகின!

கொழும்பு, ஏப். 17

புத்தாண்டு விடுமுறையில் சென்ற ரயில் சாரதிகள் பணிக்கு திரும்பாததால் நேற்று காலை முதல் 34 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன என்று புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், புத்தாண்டு விடுமுறைக்கு சென்ற பலரும் பணிகளுக்கு திரும்புவதில் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகினர் என்றும் தெரியவருகின்றது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.